விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 90 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை (23.10.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்

# 359 புலி இயக்கப் போராளிகளை விசாரிக்க மன்னார், வவுனியாவில் விசேட நீதிமன்றங்கள்

## மன்றுகள் அமைக்கப்பட்டு விட்டன; விரைவில் விசாரணைகள்

(கொழும்பு)

பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களெனக் குற்றஞ் சாட்டப்பட்ட 359 புலி இயக்க முன்னாள் போராளிகள் உள்ளூர் சிறைகளில் உள்ளனர். இவர்களுக்கு எதிராக 309 வழக்குகள் உள்ளன. இவர்களை விசாரிப்பதற்காக மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா தெரிவித்தார்.

சிறைகளிலுள்ள புலி இயக்கச் சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்கென நான்கு விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதன் ஓரங்கமாகவே மன்னாரிலும், வவுனியாவிலும் விசேட நீதிமன்றங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு விசேட நீதிமன்றங்களும் அனுராதபுரத்திலும், கொழும்பிலும் அமைக்கப்படவுள்ளன.

பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட அறுநூறுக்கும் மேற்பட்ட புலி இயக்க முன்னாள் போராளிகள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். மன்னாரிலும், வவுனியாலும் அமைக்கப்பட்டுள்ளன. விசேட நீதிமன்றங்கள் விரைவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா தெரிவித்தார்.

## மாதகல் மேற்கில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் வெளியேற்றம்

(மாதகல்)

கடற்படையினர் நிலைகொண்டிருந்த மாதகல் மேற்கு பிரதேசம், மக்கள் மீள்குடியேற்றத்துக்காக விடுவிக்கப்பட்டுள்ளது என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் முரளிதரன் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி குறித்த பிரதேசம் கடற்படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதியில் மீள்குடியேறவுள்ள மக்கள் தொடர்பான பதிவுகள் மாதகல் பகுதியில மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதுவரை 02



மாதகல் மேற்கில் மீளக்குடியேறச் சென்ற பெண்களில் ஒரு பகுதியினரைப் படம் காட்டுகிறது.

## இலங்கை அகதியை ஏமாற்றினார்: அகோரம் படத்தயாரிப்பாளர் கைது

(சென்னை)

அவுஸ்திரேலியாவில் வேலை செய்வதற்கு விசா பெற்றுத் தருவதாக கூறி இலங்கை அகதி ஒருவரை ஏமாற்றிய குற்றச்சாட்டில் தமிழ் படத் தயாரிப்பாளரான சூடாமணி என்பவர் விருக்கம்பாக்கத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

இராமநாதபுரத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த வசந்தகுமார் செய்த முறைப்பாட்டை தொடர்ந்தே இவர் கைது செய்யப்பட்டார்.

இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கியூப் பிரிவு தகவல்கள் தெரிவித்தன. இந்தப் படத் தயாரிப்பாளரிடமிருந்து எட்டு போலியான கடவுச் சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படத் தயாரிப்பிற்காகத் தான் பட்ட கடன் சுமை தாங்க முடியாமலேயே இப்படியான 02

## 13ஆவது திருத்தத்தை நீக்க அரசு முயற்சி தெரிவுக்குழுவில் எவ்வாறு இணைவது?

### இரா.சம்பந்தன் எம்.பி.கேள்வி

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச உள்ளிட்ட அரசாங்கத்தின் பல முக்கிய உறுப்பினர்கள் 13ஆம் திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தும் போது, எவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைவது என்று இரா.சம்பந்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு 02

## கோல்டன் கீ நிதி நிறுவனத்தில் வைப்புச் செய்த 18 பேர் தற்கொலை

(கொழும்பு)

கோல்டன் கீ நிதி நிறுவனத்தில் பணத்தை வைப்புச் செய்த 18 பேர் உரிய நியாயம் கிடைக்காத காரணத்தினால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைப்புச் செய்த பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது மன உலைச்சலினாலும் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டும் 50க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

பணத்தை வைப்புச் 02

## 3500 கிராம சேவகர்கள் சேர்க்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

புதிதாக 3500 கிராம சேவகர்களை இணைத்துக் கொள்ளவென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாதம் 5ஆம் திகதி இது குறித்து அரச வர்த்தமானியில் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.



நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று மேற்படி பிரதேச சபையின் முன் தமிழ்க் கூட்டமைப்பினர் நடத்திய கவனயீர்ப்பு போரட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## வடக்கில் ஏழு வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இடைநிறுத்தம்


(யாழ்ப்பாணம்)

வெளிநாடு சென்றிருக்கும் வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் நாட்டுக்குத் திரும்பும்வரை ஏழு வருடங்களுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்களை இடைநிறுத்தி வைக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெறாத அளவிற்கு வடமாகாணத்தில் அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் பாடசாலைச்சமூகம், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறாக நடைபெறுவதாகவும் அந்த அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கை வருமாறு:-

யுத்தசூழ்நிலைகளிலும், இடப்பெயர்வுகளிலும் இருந்து வடமாகாணம் இப்போது 02

# தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்ற வேண்டும்



## - அமைச்சர் டிலான் பெரேரா கோரிக்கை

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு 13வது திருத்தச் சட்டமூலம் பொருத்தமானதொன்று எனக் குறிப்பிட்ட அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்மொழிந்திருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொண்டு தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் 57வது பொதுக்கூட்டம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண 13வது திருத்தச் சட்ட மூலம் சிறந்ததொரு முறை. இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் விவாதங்களை நடத்தித் தீர்மானிக்க முடியும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆர்வம் காட்டவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது இந்த நடைமுறையைக் கைவிட்டு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொண்டு தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஆராய முடியும். இத்தெரிவுக்குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்களை ஆறு மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்த காலத்திலேயே கடந்த கால சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் தற்பொழுது இந்த அச்சுறுத்தல் இல்லை. நாட்டில் சமாதான சூழ்நிலை காணப்படும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து அரசாங்கம் உள்ளிட்ட சகல கட்சிகளுடனும் விரிவான விவாதங்களை நடத்த முடியும்.

அதேநேரம், நாட்டிலுள்ள வறிய மக்களுக்கு உதவும் வகையில் அரசாங்கம் கொண்டுவரும் திவி-நெ கும சட்டமூலத்துக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நீதிமன்றம் சென்றுள்ளனர்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அபிவிருத்திகளைக் காட்டிலும் தமது அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலேயே உறுதியாகவுள்ளனர். எனவே, அவர்களுக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

## நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டதை கண்டித்து நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம்

யாழ். மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து பிரதேச சபைகளில் இன்று திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்மையை கண்டித்தும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் பாதுகாப்பை வலியுறுத்தியுமே இந்த போராட்டம் நடைபெற்றது.

பிரதேச சபைகளின் முன்பாக "வடக்கு கிழக்கு தமிழர் தாயகம்", "அரசியல் கைதிகளை விடுதலை செய்ய எமது நிலம் எமக்கு வேண்டும்", "மக்கள் ஆட்சியை மதித்து நட" போன்ற சுலோகங்களை தாங்கியவாறு போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கீழுள்ள வேலணை, நெடுந்தீவு மற்றும் ஊர்காவல்துறை ஆகிய பிரதேச சபைகளை தவிர அனைத்து பிரதேச சபைகளிலும் நடை-பெற்றது.

இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு, தமிழ் தேசிய கூட்டமைப்பு பகிரங்கமாக அழைப்பு விடுத்த போதிலும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை என பிரதேச சபை தவிசாளர்கள் தெரிவித்தனர்.

## முன்னாள் போராளிகள் 365 பேருக்கு மட்டுமே புனர்வாழ்வளிக்க வேண்டியுள்ளது

### - முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ்

முன்னாள் புலி இயக்கத்துப் போராளிகளில் 365 பேருக்கு இன்னமும் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியுள்ளது என்று முன்னாள் சட்டமா அதிபர் கூறினார்.

இலங்கை தயாரித்த மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டு திட்டம் சட்டபூர்வமானதொரு எழுத்து ஆவணம் என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்றுள்ள அவர், ஏசியன் ட்ரிபியூன் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியின் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான சிறந்த பல வேலைத் திட்டங்கள் தற்சமயம் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையை அடிப்படையாக கொண்டே இந்த நடவடிக்கைகள் முன் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்சமயம் மீள் எழுச்சி பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடைந்த முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி போராளிகளில் 635 பேருக்கே இன்னமும் புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

## இரண்டு நாட்களுக்கு கடும் மழை பெய்யக்கூடும்

நாட்டின் பல பாகங்களிலும் நேற்று (22) பிற்பகல் 2 மணிக்குப் பின் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி எதிர்வரும் 48 மணித்தியாலங் களில் நாட்டின் வடக்கு, கிழக்கு, வட மேல் மற்றும் மத்திய மாகா ணங்களில் மழை அதிகம் பெய யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் எஸ். எச்.காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

மழையுடன் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடும் என்பதால் பொது மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 13ஆவது திருத்தத்தை...(தொடர்)

வழங்கிய செவ்வி ஒன்றிலெயே, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார். 13ஆம் திருத்தச் சட்டத்தினை அடிப்படையாக கொண்டே தீர்வு வழங்க வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரி வருகிறது. இந்தியாவும் இதனையே வலியுறுத்துகிறது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் பல்வேறு உறுப்பினர்கள் இதனை நீக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். தமிழ் மக்களுக்கான தீர்வுக்கு ஜாதிக ஹெல உறுமய, விமல் வீரவன்ச போனறோர் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் 19 அரசாங்க உறுப்பினர்கள் உள்ளனர். எதிர்கட்சிகளின் சார்பில் 12 உறுபினர்களை இணைத்துக் கொள்ளப்படுவர். இதிலும் அரசாங்கமே பெரும்பான்மை வகிக்கிறது.

இவ்வாறான ஒரு குழுவில் அரசாங்கத்தின் கருத்துக்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படும். இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைவதில் சாத்தியம் இல்லை என்று சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அரசாங்கத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தமது தீர்வுத் திட்டத்தை எழுத்து மூலம் சமர்ப்பித்திருப்பதாகவும், கடந்த ஒரு வருடமாக அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தை எழுத்து மூலமாக வழங்குமாறு கோருகின்ற போதும், அதனை இன்னும் அரசாங்கம் வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தின் நடவடிக்கைக-ளில் நம்பிக்கை இல்லாது போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கோல்டன் கீ...(தொடர்)

செய்த 3000த்திற்கும் மேற்பட்டவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

## இலங்கை அகதியை...(தொடர்)

வேலையில் ஈடுபட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இவர் அகோரம் எனும் திரைப்படத்தை தயாரித்துள்ளார். இவரது தம்பியாரும் ஆட்களை ஏமாற்றத்தில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

## மாதகல் மேற்கில்...(தொடர்)

269 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் விடுவிக்கப்பட்ட குறித்த பகுதியில் நேற்று 212 குடும்பங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று காணி துப்பரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், அப்பகுதியில் மீள்குடியேறும் மக்களுக்கு அரசின் விதிமுறைகளுக்கு அமைவாக வீட்டுத்திட்டங்கள், வாழ்வாதார உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு மற்றும் வீதி, மின்சாரம் உள்ளிட்ட தேவைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடற்படையினர் மாதகலிலிருந்து 20ஆம் திகதி வெளியேறுவர் என்று மு.சந்திரகுமார் எம்.பி. முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் மாதகல் மீள்குடியேற்றம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் 12ஆம் திகதி நீதிமன்ற விசாரணைக்கு வருவது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் ஏழு வருடங்களுக்கு...(தொடர்)

தான் விடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இதைவிட இன்னும் பல பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்கமுடி யாமல் உள்ளன. இந்நிலைமையில் தேசிய கொள்கைகள் என்று சொல்லிக் கொண்டு பாடசாலைகளின் கட்டுக்கோப்புக்களை முற்றாகக் குழப்பி இடமாற்றம் என்ற பெயரில் புனிதமான தொழிலில் வெறுப்பை ஏற்படுத்தி வகை தொகையில்லாமல் ஒரே பாடசா லையில் இருந்து பல ஆசிரியர் களை இடமாற்றம் செய்வதன் மூலம் கல்வியில் அபிவிருத்தி யைக் காணமுடியாது. இதற் காக ஆசிரியர் சம்பந்தமில்லாத அரசியல் கட்சிகளிடமும், அதி காரிகளிடமும் அலைந்து திரியும் சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

வலிகாமம் பிரதேசத்தில் தற் போது நடைமுறைப்படுத்துவதற் காக முன்வைக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றப்பட்டியலில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டறிந்து அந்த வலயத் தில் உள்ள அனைத்து அதிபர் களையம். ஆசிரியர்களையும் கடந்த 21.10.2012 அன்று அழைத்து கலந்துரையாடல் ஒன்றினை நடாத் தியது. அதில் ஒரே பாடசாலை யில் இருந்து பத்துக்குமேற்பட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும், வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்கு அவர் கள் கோராத தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக வும், பாடசாலைகளின் கட்டுக் கோப்புக்களை முற்றாகச் சீர்கு லைக்கும் நிலையில் பாடசாலை முகாமைத்துவக்குழுவில் இருக்கும் அனைவரையும் ஒட்டுமொத்த மாக இடமாற்றம் செய்யவுள்ளதாகவும், ஏற்கனவே வன்னி பிரதேச பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் வெற் றிடத்திற்கு பதிலாசிரியரை வழங் காமலும் உள்ளதனைச் சுட் டிக் காட்டி ஒட்டுமொத்தமாக இந்த இடமாற்றமானது ஒருசிலரின் திருப் திக்காக மட்டும் செய்யப் படுவதாக ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டது.

இதைவிட கலந்துகொண்ட ஆசிரியைகளில் பலர் இந்த இடமாற் றம் நடைமுறைப்படுத்தப்படுமானால் தாம் முன்கூட்டியே ஓய்வுக்குச் செல்லவுள்ள தாகவும் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறான நெருக்கடிநிலைக ளுக்கு அதிபர்கள் முகங்கொடுக்க முடியாமல் இருப்பதனால் பாடசாலைத் திறப்புக்களை அலுவல கத்தில் கொண்டு ஒப்படைத்துவிட்டு தாம் ஒதுங்கிக்கொள்ள வுள்ளதாகவும் பல அதிபர்கள் கருத்து வெளியிட்டனர்.

இது தொடர்பாக மாகாணக் கல்விப்பணிப்பாளருடன் சங்கத்தின் பொதுச் செயலாளர் தொடர்பு கொண்டு நிலைமைகளைத் தெளிவுபடுத்தி உடன-டியாக இவற்றை நிறுத்தி வடமாகாணத் திற்கு என்று சில நடைமுறை களை வகுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தை அகற்ற முற்பட்டால்

# தமிழர்கள் கிளர்ந்தெழுவர் என்கிறார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கை நிரந்தரமாக இணைப்பதற்கு கிழக்கில் சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்த முடியாத அரசாங்கம், செயலாளர், அமைச்சரின் ஆலோசனையை கேட்டு 13ஆவது திருத்தச்சட்டத்தை அகற்றுவதற்கு முற்பட்டால் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவது திண்ணமாகும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி பிரதம கொரடாவுமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச்சட்டத்தினை அகற்ற சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று முன் வைக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் குறித்து நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின் சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்குவதில் ஒரு ஆரம்பப் படியாக ஏற்படுத்தப்பட்டதே 13ஆவது திருத்தச் சட்டமாகும் அதனை அரசியலமைப்பிலிருந்து இல்லாதொழிக்க சிறுபான்மையினராகிய எம்மால் அனுமதிக்க முடியாது.

எமது நாட்டில் இனவாத ஆட்சியாளர்களால் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அனைத்தும் கிழித் தெறியப்பட்டதே வரலாறாகும். இது அனைவராலும் அறியப்பட்ட விடயம். இதற்குக் காரணம் இலங்கைக்குள் சிங்கள தேசிய ஆட்சியாளர்களால் சர்வதேசத்தின் எந்தவித அனுசரணை, பார்வை, மேர்ப்பார்வை கண்காணிப்பு எதுவும் இல்லாது ஏற்படுத்தப்பட்டமையே ஆகும்.

தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயத்தில் அல்லது பிரச்சினையில் எந்தவிதமான தீர்வையும் வழங்கக் கூடாது என்பதுமே காரணமாகும். இந்த நேரத்தில், இலங்கையின் சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் சர்வதேசத்தின் பார்வை விழிப்படைந்துள்ள நிலையில், இலங்கை அரசின் குற்றங்களைக் கண்டு பிடித்து விசாரிப்பதற்கான சூழல் பலமடைந்திருக்கின்ற நிலையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதை நாம் அனுமதிக்கக் கூடாது.

இலங்கை அரசாங்கம் சிறுபான்மை இனங்களுக்கு துரோகத்தை விளைவித்தும், சர்வதேசத்தின் பார்வையில் மண்ணைத் தூவியும், ஏமாற்றியும்,ஒருபக்கச் சார்பாக ஆட்சி முறையை குடும்ப ஆட்சி முறையாக ஒரு வழிமுறைமைக்கு ஒப்பானதாக வழிநடத்தி வருகிறது. இது ஒரு ஜனநாயக ஆட்சி முறைக்கு விரோதமானது.

எம்மைப் பொறுத்தவரையில், பல ஒப்பந்தங்களால் ஏமாற்றப்பட்டு விரக்தியின் விளிம்பில், தமிழ் மக்ள இருக்கின்றனர். சர்வதேசத்தின் பார்வையுடன் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை இல்லாதெழிக்கப்பட்டால் கொஞ்சமாவது செயற்படுகின்ற மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட்டுவிடும்.

இதனால் வடக்கு, கிழக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபை ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்கள் ஊடாக சிறுபான்மை மக்கள் அடையும் நன்மை இல்லாதெழிக்கப்பட்டால் அனைத்து விடயங்களுக்கும் கையேந்த வேண்டிய நிலைமையே ஏற்படும்.

குறிப்பாக, உள்ளூராட்சிச் சபை முறைமை, நியதிச் சட்டம் உருவாக்குதல், எமக்கான முகாமைத்துவக் கட்டமைப்பு, அதிகாரத்தைக் கோருகின்ற நிருவாக முறைமை போன்ற மத்திய அரசாங்கத்துக்குக் கட்டுப்படாத பல விடயங்கள் இல்லாது போகும்.

ஆகவே இந்த 13ஆவது திருத்தச்சட்டம் இல்லாதெழிக்கப்படக் கூடாது. தமிழ் மக்களுக்கான உரிமைசார் பிரச்சினைகளுக்கான தீர்வின் ஆரம்ப வடிவமாக இதனை ஏற்றுள்ளோம். அதனைப் பாதுகாக்கின்ற நிர்ப்பந்தத்தின் நெருக்கடியில் இருந்து கொண்டு, 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய முழு அதிகாரத்தினையும் கேட்கின்ற நிலைமையில் நாம் உள்ளோம். இதற்காக சர்வதேசம் இலங்கை அரசாங்கத்துடன் துணிந்து அழுத்தங்களை பிரயோகிக்கின்ற சூழ்நிலையில் இச்சட்டத்தினை அகற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சி சிறுபான்மையினருக்கு செய்யப்படும் துரோகமாகவே அமையும்.

எனவே இந்த 13ஆவது திருத்தச்சட்டத்தினை அகற்றும் நடவடிக்கைகள் அனைத்தினையும், இலங்கை அரசாங்கத்தின் ஒரு பக்கச் சார்பான ஆட்சியாளர்கள் மேற்கொள்வதனை தடுத்து நிறுத்த தமிழ் மக்களும், சர்வதேசமும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும். அத்தோடு சிறுபான்மையினருக்கு வழங்கப்பட வேண்டிய முழுத் தீர்வையும் வழங்குவதற்கும் முன்னின்று உழைக்க வேண்டும் என்றார்.

## இலவச கண் பரிசோதனை

(மீரான்)

கண்ணில் குறைபாடுள்ள மாணவர்களுக்கு இலவசமாகக் கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்குவதை லயன்ஸ் கழகம் மேற்கொண்டுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழகம், மாவட்டம் 306-பி1 அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு கண்பரிசோதனை நடைபெறுகின்றன.

6 வயது தொடக்கம் 12 வயது வரையுள்ள மாணவர்கள் உள்ள பாடசாலைகள் மேற்படி கீழ் காணும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு கண்பரிசோதனை சேவையை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது.

லயன் கலாநிதி இரா.சாந்தன், 306-பி-1 மாவட்டம், கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு- 07791355864.

## கிணற்று நீர் வரி: தினேஷ் எதிர்ப்பு

"கிணற்று நீர் பயன்பாட்டுக்கு வரி அறவிடுவது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நீர்ப்பாசன அமைச்சு எதிர்ப்பதாகவும் இந்த தீர்மானத்தை அதிகாரிகள் மீளாய்வு செய்ய வேண்டும்" என நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவரத்தன கூறியுள்ளார்.

'நீர்ப்பாசன அமைச்சின் இந்த நடவடிக்கை நியாயமற்றது என்பதால் நீர்வழங்கல் அமைச்சர் என்ற வகையில் இது போன்ற ஒரு வரிக்கு ஆதரவாக நான் ஒரு போதும் கையுயர்த்த மாட்டேன்' என அவர் கூறினார்.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றபோது, விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினரின் பாரியார் குழந்தை வைத்திய நிபுணர் திருமதி விஜயகுமாரி திருக்குமரன் பரிசில் வழங்குவதையும் காணலாம்.

## உடுவில் தனியார் கல்வி நிலையங்கள் இரு நாட்கள் இயங்கா

(வலிகாமம்)

வலி.தெற்கு உடுவில் பிரதேச சபைக்கு உட்பட்ட தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி, ஞாயிறு நாட்களில் மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இந்தக் கூட்டம் நடைபெற்றது.

உடுவில் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் தி.பிரகா தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் வேளையில் மூடி மாலை வகுப்புகளை நடத்த அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் இரு பிரதேச சபைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முஸ்தீபு

உள்ளூராட்சி மன்றங்களின் அசிரத்தையான செயல்பாட்டினால் வலி.தெற்கு உடுவில் மற்றும் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் ஆகிய இரு பிரதேச சபைகளின் மீதும் ஒப்பந்தகாரர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இதன் முதற் கட்டமாக சட்டத்தரணி ஊடாகக் கடிதம் மூலமான கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளார். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் புதிய கட்டடத்தை கையேற்பதில் உள்ளூராட்சி அமைச்சுக்கும் உரிய பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் இடையே முரண்பட்ட நிலைமை காணப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக தற்போது கட்டடம் கட்டியவர்களுக்கான இறுதிக் கட்டக் கொடுப்பனவை வழங்குவதில் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் செயல்திட்டத்தின் பிரதிச்செயலாளர் உரிய கொடுப்பனவை விடுவிக்காது இழுத்தடித்து வருவதாக பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஏற்கனவே பிரதேச சபைகள் குறிப்பிட்ட நிதியை விடுவிப்பதற்கு வசதியாக உரிய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் பிரதேச சபைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிதியை ஒப்பந்தகாரருக்கு விடுவிக்காது இழுத்தடித்து பிரச்சினையை அதிகாரிகள் தோற்றுவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றைய இராசி பலன் (23.10.2012)

நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 7ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**நட்சத்திரம்** : திருவோணம் இரவு 10.08 வரை அதன் பின் அவிட்டம்
**திதி** : நவமி இரவு 11.59 வரை. அதன் பின் தசமி
**சுபநேரம்** : 10.32 - 12.02
**இராகுகாலம்** : 3.02 - 4.32
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : வீண் செலவு, கடன், தூக்கமின்மை
**இடபம்** : காரிய சித்தி, ஆடம்பர செலவு, தொழில் சிரமம்
**மிதுனம்** : வியாபார விருத்தி, நினைத்ததை சாதித்தல், பழைய வரவு
**கடகம்** : காரிய வெற்றி, கொடுக்கல் வாங்கல் நன்று, நண்பர் உதவி
**சிங்கம்** : தேக நலம், அந்நியர் உதவி, சிந்தித்து செயற்படுதல் தேவை
**கன்னி** : வீண்பழி கேட்டல், பயனற்ற செய்கை, தொழில் கவனம் தேவை
**துலாம்** : புதியவை கிடைத்தல், வியாபார முன்னேற்றம், எதிர்மாறான நிகழ்வு
**விருச்சிகம்** : வீண் செலவு, அதிக சிரமம், நண்பர்கள் மனஸ்தாபம்
**தனுசு** : தொழில் விருத்தி, தர்ம செய்கை, கடன் நிவர்த்தி
**மகரம்** : அதிக செலவு, வாக்கு கஷ்டம், எதிரிகள் கவனம்
**கும்பம்** : தொழில் வளர்ச்சி, புத்திக் கூர்மை, பெரியோர் சந்திப்பு
**மீனம்** : மனமகிழ்ச்சி, பிறரால் பாராட்டு, தொழிலாளர் ஒத்துழைப்பு

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு பிரச்சினை இல்லை

## - தந்தை செல்வாவின் மகன் பி.பி.சிக்குப் பேட்டி

தந்தை செல்வா என்று அழைக்கப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மகன் சந்திரஹாசன் சுமார் 30 ஆண்டுகளாக தமிழகத்தில் வசித்துவருகிறார்.


இலங்கையிலிருந்து யுத்த காலத்தில் வெளிநாடுகளுக்கு அகதிகளாக சென்றவர்கள் நாடு திரும்புவதில் எந்தவிதமான பாதுகாப்பு ரீதியான பிரச்சினைகளும் இல்லையென்று இந்தியாவில் இலங்கை அகதிகளின் நலன்சார் விடயங்களில் ஈடுபட்டுவரும் தொண்டு நிறுவனமான ஈழ ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தின் (ஆஃபர்) தலைவர் எஸ்.சி. சந்திரஹாசன் கூறுகிறார்.

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு திரும்பிச்சென்றுள்ள இலங்கை அகதிகள் ஆறாயிரம் பேர் வரையில் தமக்கு அங்கு பாதுகாப்புப் பிரச்சினைகள் இருப்பதாக உணரவில்லை என்றும் அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினைகளே இருப்பதாகவும் அவர் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

தமிழகத்தில் வசிக்கின்ற இலங்கைத் தமிழ் அகதிகள் சொந்த நாட்டுக்கு திரும்பிச் செல்வதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் தமது அமைப்பு ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இரு நாட்டு அரசுகளுடன் இதற்காக பேச்சு நடத்தி இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை உருவாக்கும் முயற்சிகளிலும் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் சந்திரஹாசன் தெரிவித்தார்.

தமிழகத்தில் சுமார் ஓர் லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் வசிக்கின்றனர், அவர்களில் 70 ஆயிரம் பேர்வரையில் முகாம்களிலேயே தங்கி இருக்கின்றனர் என்று அந்த அமைப்பு கூறுகிறது.

1983-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்ற குடும்பங்களிலிருந்து சுமார் 21 ஆயிரம் பேர் இந்திய மண்ணில் பிறந்தவர்கள் என்றும் அவர்களில் தற்போது 16 ஆயிரம் பிள்ளைகளுக்கு இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஊடாக பிறப்புச் சான்றிதழ்களைப் பெற வேண்டியிருப்பதாகவும் அவர் கூறினார். நூற்றுக் கணக்கான தமிழர்கள் அண்மைக் காலங்களில் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்று பிடிபட்டிருக்கிறார்கள்.



இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் பிறப்பைப் பதிந்து பிறப்புச் சான்றிதழ் பெறாதவர்கள் "நாடற்றவர்களாகும்" நிலை இருப்பதால் அவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொடுத்து இலங்கைக் குடியுரிமையை உறுதிப்படுத்த வேண்டியிருப்பதாகவும் ஈழ ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தின் ஸ்தாபகர் சந்திரஹாசன் தெரிவித்தார்.

இதேவேளை, மலையக பிரதேசங்களிலிருந்து வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியேறி, பின்னர் அங்கிருந்து யுத்தத்தால் இடம்பெயர்ந்து தமிழகத்துக்கு அகதிகளாக வந்த இந்திய வம்சாவளி தமிழர்களில் சுமார் 30 ஆயிரம் பேர்வரையில் முகாம்களில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இவர்கள் நாடற்றவர்கள் என்ற நிலையில் இருந்ததால் அவர்களுக்கும் குடியுரிமை ஆவணங்களை பெற்றுக்கொடுக்க வேண்டியிருப்பதாவும் அவர் கூறினார்.

அந்த நடவடிக்கையின் ஒருகட்டமாகவே சென்னையிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலய அலுவலகம் ஊடாக இராமேஸ்வரம் அகதிகள் முகாமில் இருப்போருக்கு சனிக்கிழமை பிறப்புச் சான்றிதழ்களும், குடியுரிமை ஆவணங்களும் வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் குடியிருப்பு காணிகளில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளதையும் அங்கு அரசியல் தீர்வுத்திட்ட முயற்சிகள் முடங்கியிருப்பதையும் சுட்டிக்காட்டிக் கேள்வி எழுப்பியபோது, அந்தப் பிரச்சினைகள் அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமாகப் பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்றும் ஈழ ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தின் தலைவர் சுட்டிகாட்டினார்.

# இலங்கையில் பாரிய எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் முழுமையாக செயற்படாத நிலையில், எதிர் வரும் மாதங்களில் இலங்கையில் பாரிய எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் தொழிற்சங்கங்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன. கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புப் நிலையத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு பணிகள் முழுமையாக இடம்பெறவில்லை.

இந்த நிலையத்துக்கு பொருத்தமான மசகு எண்ணெய் இருப்பு குறைவடைந்தமையே இதற்கான காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது மசகு எண்ணெயின் இருப்பு நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த மாதமளவில் எரிபொருட்களை விநியோகிக் முடியாத நிலை ஏற்படும் என்று சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் அடுத்தமாதம் ஈரானில் இருந்து நான்கு கப்பல்களில் மசகெண்ணெய் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் முன்னதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறைக் கடலில் இரண்டு இராட்சத சுறா மீன்கள் சிக்கின

அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சின்னப் பாலமுனை பகுதியில் இரு இராட்சத சுறாக்கள் கடந்த வியாழக்கிழமை மீனவர்களிடம் சிக்கின. கடலுக்குச் சென்றிருந்த ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்களின் வலையிலேயே இச் சுறாக்கள் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு சுறாக்களும் சுமார் 1000 கிலோகிராம் எடையுடையவை.

இந்தச் சுறாக்கள் சுமார் மூன்றுள லட்சம் ரூபாவுக்கு விற்பனையாகியதாக குறித்த மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒலுவில் பிரதேசத்தில் கடற்றொழிலாளி ஒருவருக்கு சொந்தமான தோணிகளுக்கு ஒரே தடவையில் சுமார் 7,000 பாரை மீன்கள் சிக்கின.

ஒவ்வொன்றும் 6 முதல் 7 கிலோ கிராம் எடையுடைய இந்த மீன்களின் மொத்தப் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச வரலாற்றில் இவ்வாறு அதிகளவான மீன்கள் பிடிபட்டமை இதுவே முதல் தடவை என இங்குள்ள மீனவர்கள் கூறுகின்றனர்.

சாதாரண நாட்களில் ஏழு கிலோகிராம் எடையுடைய பாரை மீனொன்று சுமார் 2,000 ரூபாவுக்குக் குறைவில்லாமல் விற்கப்படும், நிலையில் 1,300 முதல் 1,500 ரூபாய் வரையிலேயே விற்கப்பட்டன.

# காணாமல் போனோரைத் தேடும் குழுவினர் நேற்று சத்தியாக்கிரகம்

சுயாதீன ஊடகவியலாளரும் கேலிச்சித்திர கலைஞருமான பிரகீத் எக்னெலிகொட காணாமல் போய் நேற்றுடன் 1000 நாட்கள் பூர்தியாகின்றன.

இதனை முன்னிட்டு காணாமற் போனோரை தேடியறியும் குழுவின் ஏற்பாட்டில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல், சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்னால் சத்தியாகிரகப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

இந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட உட்பட காணாமல் போனோரின் உறவினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி சத்தியாக்கிரகத்தின் முடிவில் சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதிகளிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில், தடுத்து வைத்திருக்கின்றவர்களின் பட்டியலை வெளியிடல், சகலவிதமாக காணாமல் போதல்களையும் தேடிப்பார்ப்பதற்கு மற்றும் சர்வதேசத்துக்கு உத்தரவாதத்தை சொல்வதற்குமான சுயாதீன ஆணைக்குழுவொன்றை ஏற்படுத்துதல், காணாமல் போதல் தொடர்பாக தேடிப்பார்க்கும் ஐக்கிய நாடுகள் சபை யின் செயற் குழு, காணாமல் போனவர்கள் தொடர்பான தேடிப் பார்ப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் காணாமல் போகச் செய்தல் குற்ற வியல் என்பதைச் சட்டமாக்குதல் போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

# திவிநெகும குறித்து பேசும் தகுதி தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இல்லை

## - அமைச்சர் பசில் ராஜபக்ச

திவிநெகும எனப்படும் வாழ்வின் எழுச்சித் சட்ட மூலம் தொடர்பில் கதைப்பதற்கான அதிகாரமும், தகுதியும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இல்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையில் காணப்படுகின்ற மாகாண சபைகளில் 90 சதவீதமான உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கட்சியை சேர்ந்தவர்கள்.

கிழக்கு மாகாணத்தை தவிர தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வேறு எந்த மாகாண சபையிலும் உறுப்பினர்கள் இல்லை.

அத்துடன் அவர்களைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகவும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே அவர்களுக்கு இந்த சட்ட மூலத்துக்கு எதிராக செயற்படுவதற்கு அதிகாரம் இல்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இலங்கையில் பிரிவினை வாதத்தை தோற்றுவிப்பதற்காகவும் புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ச அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# ஐ.தே.க.விலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கக் கோரிக்கை

சரத் பொன்சேகா தலைமையில், அண்மையில் கொழும்பு, ஹைட் பார்க் மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த பொதுப் பேரணியில் கலந்துக் கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் பல உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டது.

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், இரண்டு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் மேலும் 15 உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையும் கட்சித் தலைமையால் உடனடியாக ரத்து செய்யப்பட்டன.

இந்த நிலையில் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் கட்சித் தலைமையிடம் விண்ணப்பிக்க ஐக்கிய தேசிய கட்சியின் குழு ஒன்று தீர்மானித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசிய கட்சியின் மீளமைப்பு குழுவின் உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான கடிதம் ஒன்றை கட்சியின் சில உறுப்பினர்களின் கைச்சாத்துடன் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் வழங்க நடவடிக்கை எடுக்க விருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெரகல - வெல்லவாய வீதியில் மண்சரிவு

பெரகல - வெல்லவாய வீதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த கடும் மழை காரணமாக வீதியின் 201 -203 மைல் தொலைவில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும்,

மோட்டார் வாகன சாரதிகள் மாற்றுப்பாதையை பயன்படுத்து மாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# இலங்கையில் மாகாணங்களை ஐந்தாகக் குறைக்க அரசு திட்டமாம்

## - மனோகணேசன் ஆருடம்



"இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் இல்லாது ஒழித்து, நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களின் எல்லைகளையும் மீளமைத்து ஐந்து மாகாணங்களாக மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் இரகசிய திட்டம் தீட்டியுள்ளது" என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

"பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன.

இந்த இலக்கை முன் வைத்தே அரசாங்கம் இன்று காய் நகர்த்துகிறது. முடியுமானால் அரசாங்கத்தின் உத்தியோகாரபூர்வ பேச்சாளர் இந்த தகவலை மறுக்கட்டும். அதேபோல் அரசில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளும் இடதுசாரி கட்சிகளும் இதற்கு பதில் சொல்லட்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

13வது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பில் சில அரசு சார்பு தீவிரவாத கட்சிகள் தொடர்ந்து பேசி வருவது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"முழு நாட்டையும் சிங்கள பௌத்த நாடாக அறிவிக்க வேண்டும் என்பதுவே இவர்களது திட்டமாகும். இதன் முதற்கட்டமாக 13ஆவது திருத்தமும் அதையோட்டிய மாகாண சபைகளும் ஒழிக்கப்படும். இரண்டாம் கட்டமாக நாட்டின் மாகாணங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு ஒன்பது மாகாணங்கள் ஐந்து மாகாணங்களாக குறைக்கப்படும். இதன் மூலம், எந்த ஒரு மாகாணத்திலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கமாட்டார்கள்.

மூன்றாவது கட்டமாக அனைத்து நிர்வாக மற்றும் தேர்தல் மாவட்டங் களிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சிறுபான்மையாக மாற்றப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு எந்த ஒரு மாவட்டத்தி லும் தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாக இருக்க முடியாத நிலைமை உருவாக்கப்படும் என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

# நல்லடக்கம் செய்யப்பட்டவர் இரண்டு வாரங்களின் பின்னர் வீடு திரும்பினார் களுத்துறையில் சம்பவம்

களுத்துறை பிரதேசத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட நபர் ஒருவர் இரண்டு வாரங்களின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

களுத்துறை வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்த சடலமொன்றைப் தந்தையின் சடலம் என பிள்ளைகள் அடையாளம் கண்டு, அதனைப் பொறுப்பேற்று இறுதிக் கிரியைகளைச் செய்துள்ளனர்.


நல்லடக்கம் செய்து இரண்டு வாரங்களின் பின்னர் குறித்த நபர் உயிருடன் வீடு திரும்பியுள்ளார். குறித்த நபர் களுத்துறை, கட்டுகுருந்த கரையோரத்தில் முன்னர் வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து லாகொஸ்வத்த என்னும் பிரதேசத்தில் குறித்த நபருக்கு வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. வேலைக்குச் செல்வதாகத் தெரிவித்து சென்ற தந்தையை சில நாட்களாக காணாதைத் தொடர்ந்து அவரது பிள்ளைகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, சுனாமியினால் அழிவடைந்த தமது பழைய வீட்டுக்கு அருகாமையில் நஞ்சருந்திய நபர் ஒருவர் ஆபத்தான நிலையில் களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிள்ளைகளுக்கு தகவல் கிடைத்தது.

தமது பழைய வீட்டிற்கு அருகாமையில் நஞ்சருந்தி உயிரிழந்தவர் தமது தந்தையாகவே இருக்கும் எனக் கருதிய பிள்ளைகள், சடலத்தைப் பொறுப்பேற்று இறுதிக் கிரியைகளை மேற்கொண்டுள்ளனர்.

இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் ஊர் திரும் பிய நபர், தமது படம் ஒட்டப்பட்ட மரண அறிவித்தல்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். உறவினர் வீடொன்றுக்கு சென்றிருந்ததாக குறித்த நபர் தெரிவித்துள்ளார்.



கண்ணில் குறைபாடு உள்ள மாணவர்களுக் இலவசமாக கண்பரிசோதனை செய்து கண்ணாடி வழங்குவதற்காக லயன்ஸ் கிளப் 306.B-1 டாக்டர். ஆர் சாந்தன் யாழ்.ஒஸ்மேனியாக் கல்லூரி மாணவர்களுக்கும் அதிபர்களுக்கும் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளார். (படம்: மீரான்)

# 13 ஆவது திருத்தம் ரத்துச் செய்யப்பட்டால் நாட்டில் பிரிவினைவாதம் தலைதூக்கும்

## - அமைச்சர் டியூகுணசேகரா

13 ஆவது திருத்தச் சட்டத்தை ரத்து செய்யக் கூடாது என ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கமே, புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்கள், ஆயுதங்களை களைய வழிகோலியது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக அதிகாரங்களை பகிர்வதற்கு ஜனாதிபதி விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், 13ம் திருத்தச் சட்ட மூலத்தை ரத்து செய்வதன் மூலம் மீண்டும் தமிழ்ப் பிரிவினைவாதம் தலை தூக்கக் கூடிய அபாயம் நிலவுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில் 13ம் திருத்தச் சட்டம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல என்றும் டியூ.குணசேகர குறிப்பிட்டுள்ளார். 13ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யும் அளவிற்கு அரசாங்கம் தேவையற்ற தீர்மானங்களை எடுக்காது என்றே தாம் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்திற்கு காத்திரமான ஓர் மாற்றீட்டு யோசனைத் திட்டம் முன்வைக்கப்படும் வரையில் அதனை ரத்து செய்வது புத்தி சாதூரியமான தீர்வாக அமையாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாகாணசபை முறைமை ரத்து செய்யப்பட வேண்டும், 13ம் திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் போன்ற கருத்துக்கள் ஐ.நா.சபையில் பாதகமான முடிவை ஏற்படுத்தும் என்றார்.

# தமிழகத்தில் சூரிய சக்தி மின்தயாரிப்புக்கு ஊக்கம்

தமிழகத்தில் சூரிய சக்தி மூலம் 3 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய கொள்கையை முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டார். இதன்படி வீடுகளில் சூரிய சக்தி அமைக்க ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. சூரிய சக்தியானது மனித குலத்திற்கு தூய்மையானதும், சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாததும், அளப்பரியதும் மற்றும் குறைவற்ற எரிசக்தி ஆதாரமும் ஆகும்.

சூரிய சக்தியை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்து தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற தொலைநோக்கு திட்டத்துடன் முதலமைச்சர் ஜெயலலிதா செயல்பட்டு வருகிறார். எரிசக்தி பாதுகாப்பு, சூரியசக்தியை கொண்டு மூவாயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தல் மற்றும் உள்நாட்டிலேயே சூரியசக்தி சாதனங்களை உருவாக்கும் வசதி ஆகியவை சூரிய சக்தி கொள்கையின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

சூரிய சக்தி சாதனங்களை தயாரிப்பவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படும்.

# புலிகளின் முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் வாய்ப்புகளை முன்னெடுப்பதற்கான கடன் தொகை!

புலிகளின் முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் வாய்ப்புகளை முன்னெடுப்பதற்கான கடன்தொகையின் முதல் கட்டத்தை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ.சதீஸ்குமார் தெரிவித்தார்.

இதேவேளை, போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலைகளில் தடுத்து வைத்து தண்டனை வழங்காது திறந்த முகாம்களில் புனர்வாழ்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் சந்திர சிறி கஜதீர தெரிவித்தார்.

இதன்பொருட்டு ஐந்து முகாம்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போதைப் பொருட்க்ளை கடத்துவோர், விநியோகிப்போர், தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

# 13ஆவது சீர்திருத்த ரத்தத்தை ரத்துச்செய்ய மக்கள் வாக்கெடுப்பு கோருகிறார் விமல் கோரிக்கை

13ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ரத்து செய்வது தொடர்பாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'விடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். 13ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை அடிப்படையாக வைத்து நாடு அரசியல் அழிவை நோக்கிச் செல்வதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

திவிநெகும சட்டமூலம் முதன்முறை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது காணப்பட்ட எதிர்ப்புக்களுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்வைப் பார்க்கும் போது இதன் ஆபத்தான நிலை தெரிகிறது. எனவே, உடனடியாக இதனை பொது மக்கள் பார்வைக்குக் கொண்டு வந்து மக்கள் தீர்ப்பின் மூலம் முடிவு காண வேண்டும் என ஜனாதிபதியிடம் விமல் வீரவங்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# காவி உடை அணிந்து, பிச்சை எடுத்த ஆசாமி கைது

பௌத்த குருமார் அணியும் காவி உடையை அணிந்து கொண்டு நன்றாக கதைக்கும் ஆற்றலிருந்தும், பேச முடியாத ஓர் ஊமை என்று நடித்துக் கொண்டு மக்களை ஏமாற்றி பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் சிலாபம் பொலிஸார் கைது செய்தார். இவர் சிலாபம் முன்னேஸ்வரம் கோயிலுக்கு அருகிலுள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்து சிலாபம் மற்றும் சிலாபத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்களை ஏமாற்றிப் பிச்சை எடுத்து வந்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் மொரட்டுவ லுணாவ பிரதேசத்திலுள்ள விகரையொன்றில் தங்கியிருந்ததாக கூறியுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அந்த தகவலும் பொய்யான தகவல் என்று அறிந்து கொண்டுள்ளனர். காவி உடையணிந்து கொண்டு தான் ஓர் ஊமை என்று கூறி வந்ததால் பொது மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கவில்லை.

மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham

ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## முன்னாள் போராளிகளைச் சமூகமயப்படுத்தும் திட்டம் மட்டும் போதாது

இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்கு வந்த காலகட்டத்தில் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த பன்னிரண்டாயிரம் புலி உறுப்பினர்களில் 10985 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுள் 594 பேர் முன்னாள் சிறுவர் போராளிகள் என்று மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியான அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். விடுவிக்கப்பட்ட சிறுவர் போராளிகள் அனைவருக்கும் கல்விப் போதனை அளித்து அவர்களின் குடும்பங்களோடு ஒன்றிணைத்து வைத்துள்ளோம் என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னர் மூன்றாம் நிலை கல்வி பயின்று வந்த 212 பேர் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். யுத்த காலத்தில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகளைப் புலிகள் இயக்கம் வலுக்கட்டாயமாகக் கூட்டிச் சென்று ஆயுதப் பயிற்சி அளித்து, யுத்த முனைக்கு அனுப்பி இருக்கிறது. யுத்தம் இறுதிக் கட்டத்தை எட்டியபோது புலிகளுக்குப் பயந்து வயது குறைந்த பெண் பிள்ளைகளைப் பெற்றோர் திருமணம் செய்து கொடுத்த சம்பவங்களும் வன்னியில் இடம்பெற்றிருக்கின்றன.

திருமணம் முடித்தால் ஆண் பிள்ளைகளையும் யுத்தப் பயிற்சிக்கு பிடித்துச் செல்லமாட்டார்கள் என்ற காரணத்தினால் சிறுவயதிலேயே அவர்களைப் பெற்றோர் குடும்ப வாழ்வுக்குள் தள்ளிய சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. ஐ.நா.மனித உரிமைப் பேரவை, "ஆயுதப் பிணக்குகளில் சிறுவர்கள்" என்ற ராதிகா குமாரசாமியின் அமைப்புப் போன்றவை, சிறுவர்களைப் போராளிகளாகப் பிடித்துச் சென்ற புலிகள் அமைப்பைக் கண்டித்திருக்கின்றன.

சிறுவர்களைப் போராளிகளாகப் பயன்படுத்தியமை அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். சர்வதேச அமைப்புகள் விடுத்த கண்டனங்களுக்கும், கோரிக்கைகளுக்கும் புலிகள் இயக்கம் செவி சாய்த்ததே இல்லை. இந்த நிலையில் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த சிறுவர் போராளிகள் உட்பட அனைத்து முன்னாள் போராளிகளுக்கும் புனர்வாழ்வு அளித்து சமூகமயப்படுத்தும் திட்டத்திற்கு அரசாங்கம் 250 கோடி ரூபாவை செலவளித்துள்ளது. தவறாக வழி நடாத்தப்பட்ட அல்லது தவறுதலாகத் தாமாகவே இயக்கத்தில் இணைந்து கொண்ட முன்னாள் போராளிகளுக்கு தொழிற்பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

சிறுவர் போராளிகளில் பதினெட்டுப் பெண்கள் ஜீ.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் சேர்ந்து தமது கல்வியைத் தொடர்கின்றனர். இதே போன்று 44 ஆண் பிள்ளைகளும் கல்வியைத் தொடர்கின்றனர். சுமார் 38 பெண் பிள்ளைகளும், 126 ஆண் பிள்ளைகளும் உயர்தர வகுப்பில் இணைந்து கல்வியைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது. விளையாட்டில் திறமை மிக்க 131 முன்னாள் புலி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய அணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதப் போராட்டத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டு இயக்கத்தில் தாமாகவே இணைந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு அரசியல் மற்றும் ஆயுத நோக்குகள் காரணமாக இருந்திருக்கலாம். அல்லது தவறாக வழிநடாத்தப்பட்டவர்களாக இருக்கலாம். இளைஞர்களும், யுவதிகளும் இலகுவில் அரசியல் மற்றும் ஆயுத சித்தாந்தங்களால் கவரப்படக் கூடியவர்கள். தமிழ் மக்களுக்கென்றொரு பிரத்தியேகமான பிரச்சினை இந்த நாட்டில் கூர்மையடைந்திருந்த காலம் ஒன்றிருக்கிறது. இன ஒடுக்கு முறையால் பாதிக்கப்பட்டவர்களும், தமிழ் ஈழம் உருவானால் மட்டுமே தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியுமென்று நம்பி ஏமாந்தவர்களும் இருக்கிறார்கள்.

எனவே அரசாங்கத்திற்கும் சிவில் சமூகத்தினருக்கும் பாரிய பொறுப்பு ஒன்றிருக்கிறது. இன முறுகல் நிலை யுத்தமாக வெடித்ததற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. 1983ஆம் ஆண்டு இடம் பெற்ற ஜூலை இன சங்காரத்தைப் போல் மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் தமிழ் மக்களுக்குப் பல தவறுகளை இழைத்திருக்கின்றன. எனவே தவறான நம்பிக்கையோடு அல்லது தவறுதலாக வழி நடாத்தப்பட்டு இயக்கங்களில் இணைந்தவர்களுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களைச் சமூகமயப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

ஏற்கனவே அரசிற்கு எதிராக ஆயுதமேந்திய சிங்கள இளைஞர், யுவதிகளின் இரண்டு கிளர்ச்சிகளை இலங்கை சந்தித்திருக்கிறது. இந்தக் கிளர்ச்சிகளில் பங்குபற்றிய ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் இன்று பல்கலைக்கழகப் பேராசிரியர்களாகவும், உயர்மட்ட அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். ஆயுதம் ஏந்திய இளைஞர், யுவதிகளுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தினால் மட்டும் போதாது. இவர்கள் தவறான பாதைக்குச் செல்லக் காரணிகளாக இருந்த தீய அம்சங்கள் நீக்கப்பட வேண்டும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், சிங்களம் மட்டும் சட்டம், பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல், அவ்வப்போது தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட நடாத்தப்பட்ட தாக்குதல்கள் எல்லாம் தவறான பாதைக்கு தமிழ் இளைஞர்களை திசை திருப்பிய எதிர்மறைக் காரணிகள் என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினை இனியும் யுத்தமாக வெடிப்பதை தவிர்ப்பதற்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு காத்திரமான பல சிபார்சுகளை முன் வைத்துள்ளது. இதனை உருப்படியாக அரசாங்கம் அமுல்படுத்துமேயானால் யுத்தமும் வெடிக்காது. புனர்வாழ்வு என்ற பிரச்சினையும் இனி எழ மாட்டாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# வன்னி மக்களின் வாழ்வோடு பருவமழையும் விளையாடுகிறது

பருவகால மழை வன்னியில் ஆரம்பமாகி விட்டது. இனி விதைப்பு அமளிதான். எல்லா வயல்களுக்குள்ளும் ஆட்களும் உழவு மெசின்களுமாக ஒரே அமர்க்களம். காடுகள் எல்லாம் களனிகளாகும். காய்ந்து தரிசாகிக் கிடந்த நிலமெல்லாம் பச்சைப் பசேலென மாறும். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில், வானம் தொடும் தூரம் வரையில் பச்சைதான் தெரியும்.

ஆனால், இந்த மழையோடு வன்னியில் இன்னொரு அமர்க்களத்துக்கும் இடமிருக்கு. இப்பவே இந்த அமர்க்களம் தொடங்கிவிட்டது. மழையோடு, வீடில்லாத சனங்கள், வீட்டை இழந்த சனங்கள் எல்லாம் பெரும் அவதிக்குள் சிக்கியுள்ளனர். வீடில்லாதவருக்கு வெயிலும் பிரச்சினைதான். மழையும் பிரச்சினைதான். வெயிலுக்கு மரநிழலில் ஒதுங்கிக்கொள்ளலாம். மழைக்கு?

மீள் குடியேற்றத்தோடு வந்த மக்களுக்கு தற்காலிக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்தத் தற்காலிகம் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமானது. இப்போது மூன்று ஆண்டுகளாகி விட்டன. ஒரு ஆண்டு மேலதிகம். அடுத்து வரப்போவது நான்காவது ஆண்டு. இரண்டு ஆண்டுக்குரிய வீடுகள் எப்படி நான்கு ஆண்டுகளுக்கு, அதாவது இன்னொரு மடங்கு காலம் அதிகமாகத் தாக்குப் பிடிக்க முடியும்?

எனவே இந்த ஆண்டு பெய்யப் போகிற பருவமழைக்கு வன்னியில் ஒரு பேரவலம் நடக்கத்தான் போகிறது. மீண்டும் சனங்கள் அகதிகளாகப் போகிறார்கள். ஆனால், இந்தத் தொகை அதிகமாக இருக்காது. மிகக் குறைந்த அளவில் என்றாலும் அகதிப் பிரச்சினை வரத்தான் போகிறது.

உண்மையில் இதற்குக் காரணங்கள் பலவாக இருந்தாலும் கவனிக்க வேண்டியது இந்திய வீட்டுத்திட்டம் மற்றும் அரசாங்கத்தின் வீடமைப்பு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளையே.

இந்திய அரசாங்கம் மிகப் பிரமாண்டப்படுத்தி அறிவித்த ஐம்பது ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் பாதிகூடக் கட்டப்படவில்லை. பாதி என்று சொல்வதை விட நான்கில் ஒரு பகுதி அதாவது காற்பங்கு கூடக் கட்டப்படவில்லை. ஏன் பத்தில் ஒரு பங்களவில் கூடக் கட்டி முடிக்கப்படவில்லை.

ஏதோ சாட்டுக்குச் செய்வதைப் போல மாதிரி வீடுகளாக இரண்டாயிரம் வீடுகள் மட்டும் கட்டப்பட்டுள்ளன. இது யானைப் பசிக்குச் சோளப்பொரி. பசியறியாதவன் பந்தி வைப்பதைப் போல. யுத்தத்தின் வடுக்களோடும் வலிகளோடும் இருக்கின்ற சனங்களை இப்படித் தொடர்ந்தும் அநாதைகளாக விடுவது பொருத்தமேயல்ல.

நடந்த யுத்தத்தில் இந்தியாவுக்கும் பங்குண்டு. இதை வெளிவந்து கொண்டிருக்கின்ற செய்திகளும் ஆதாரங்களும் தாரளமாக உறுதிப்படுத்துகின்றன. இதையெல்லாம் இந்தியா மறுக்கவும் இல்லை. ஆகவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சனங்களுக்கு உதவ வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்குண்டு. ஆனால், அரசியல் வரலாற்றில் ஆளும் தரப்புகள் அனைத்தும் நலன்களின் அடிப்படையிலேயே சிந்திப்பதால் மக்களைக் குறித்து அவை முழுமையாக - நீதியாகச் சிந்திக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. என்றாலும் குறைந்த பட்ச நாகரீகம் கருதி, ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றையாவது செய்யலாம். செய்ய வேண்டும்.

இதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பில் ஈடுபட்டு வரும் சுவிஸ் மற்றும் செஞ்சிலுவைச் சங்க வீடமைப்பு நடவடிக்கைகள் பாராட்டுத்தக்கதாக உள்ளன. வீடமைப்பில் கடைப்பிடிக்கப்படும் சுயாதீனத்தன்மை, விரைவுத் தன்மை, ஒழுங்கு என்பன முக்கியமானவை.

அதிக சத்தமில்லாமல் தங்கள் உதவிப் பணிகளை மேற்கொண்டு வரும் இந்தத் தரப்புகள் வீடமைப்புக்கு அப்பாலும் பல உதவிகளைப் பாதிக்கப்பட்ட சனங்களுக்குச் செய்கின்றன. வாழ்வாதார உதவிகளாக, பிரதேசத்துக்குத் தேவையான உட்கட்டமைப்பு வேலைகளாக இது விரிவடைந்துள்ளது.

அதிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப் பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள்தான் இந்தப் பொறியில் வசமாகச் சிக்கப் போகிறார்கள். இவர்களில் பலர் இன்னும் தங்கள் சொந்த இடங்களுக்கே செல்லவில்லை. உதாரணமாக கேப்பாப்பிலவு மக்கள்.

தற்காலிக வீடு மாத்திரம் அல்ல. இவர்கள் இருக்கின்ற இடமும் தற்காலிகமானதாகவே இருக்கிறது. இதனால் இவர்கள் இன்னமும் அகதிகள்தான். மீள்குடியேறிகள் என்று சொல்லப்பட்டாலும் வாழ்தலின் அர்த்தத்தில் இவர்கள் அகதிகளே.

யுத்த முடிவோ, அதற்குப் பின்னான மூன்றாண்டு கால நீட்சியோ, பிரதேசத்துக்குத் திரும்புதலோ, இந்தச் சனங்களுக்கு எந்தத் தீர்வையும் கொண்டு வரவில்லை. பதிலாக தொடரும் நிழலாகத் துயரத்தையும் அலைக்கழிவையும் நிச்சயமற்ற தன்மையையும் உத்தரிப்பையுமே தருகின்றன.

தொண்டு நிறுவனங்கள் பலவும் தங்களிடம் நிதி முடிந்து விட்டது என்று சொல்கின்றன. அல்லது இந்த மக்களுடைய தேவைகளைப் பற்றி தங்களின் மேலிடத்துக்கு எழுதியுள்ளோம். அங்கிருந்து பதில் வந்தால் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கின்றன.

சில தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்ட திட்டங்களுக்கு அப்பால் தங்களால் எதுவும் செய்ய முடியாது என்று கையை விரிக்கின்றன.

யுத்தத்தை எப்படி இந்த மேலாதிக்கச் சக்திகள் ஆதரிக்கின்றனவோ, எவ்வாறு கூட்டுச் சேர்ந்து அதை நடத்துகின்றனவோ அவ்வாறே யுத்தகால நிலைமையையும் அதற்குப் பின்பான நிலைமையையும் இவை கூட்டாக இணைந்து தொழிற்படுத்துகின்றன.

இல்லையென்றால், அமெரிக்காவின் யு.எஸ் எயிட், ஐரோப்பிய ஒன்றியம், அரபு லீக், சார்க் அமைப்பு, கொமென்வெல்த் என்ற அமைப்புகள் இந்த மக்களுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்க முடியும். அப்படிச் செய்திருக்கவும் வேண்டும். ஆனால், அது நடக்கவே இல்லை.

இதைக் குறித்து யாரும் பெரிதாகச் சிந்தித்ததாகவும் இல்லை. தமிழ் அரசியற் தரப்பினர் கூட இந்த அமைப்புகள் மற்றும் நாடுகளிடம் ஒரு வலுவான கோரிக்கையை முன்வைத்துப் பேசியதோ வற்புறுத்தல்களை மேற்கொண்டதோ இல்லை.

ஆனால், மக்கள் தங்களுக்கான முதலுதவித் தேவையுடனேயே காத்துக் கொண்டிருக்கின்றனர்.

துயரவெளியில் அவர்கள் தனித்து விடப்பட்டுள்ளனர். அவர்களைச் சுற்றி பல புயல்கள் வீசிக் கொண்டிருக்கின்றன. ஒரு நாளை, ஒரு கணத்தைக் கழிப்பதற்கே அவர்கள் பெரும்பாடு படுகிறார்கள்.

இதேவேளை இந்தச் சனங்களின் வாழ்க்கையை தினமும் வந்து பலரும் பார்த்துப் போகின்றனர் வெளியூர்வாசிகள். அதிலும் அதிகமானவர்கள் தென்னிலங்கை மக்கள்.

இவர்களிடம் கூட யாரும் வாய்திறப்பதில்லை. இந்தச் சனங்களைக் குறித்து எவரும் அவர்களிடம் பேசுவதில்லை.

அவர்களும் இந்தச் சனங்களைக் குறித்து எதையும் கேட்டறிவதில்லை. இந்தச் சனங்களின் கதையை, நிலையை அறிய விரும்புவதுமில்லை.

ஏன், வருவோரெல்லாம் புலிகளின் சுவடுகளைத் தேடுகிறார்களே தவிர, மிஞ்சியிருக்கும் அகதிச் சனங்களைப் பற்றிப் பார்க்கிறார்களில்லை.

எங்களைக் குறித்து யாரும் கண்களையும் திறக்கவில்லை. இதயத்தையும் திறக்கவில்லை என்று வருத்தத்தோடு புதுக்குடியிருப்பு திம்பிலி என்ற இடத்தில் தற்காலிக குடியிருப்பில் தற்காலிகக் குடிசையொன்றில் வாழும் அந்திரஸ் பிலோமினா சொன்ன கருத்து புறக்கணிக்கவே முடியாதது. மறுத்துப் பேசவும் முடியாதது.

உலகம் எப்படி இருக்கிறது? உலகத்தின் கண்களும் மனமும் எப்படியுள்ளது? என்பதற்கு இன்றைய இந்த வன்னி நிலைமைகள் மேலும் ஒரு வலுவான சாட்சியம்.

மாரி மழை யாருக்காகவும் பொறுத்துப் பெய்வதுமில்லை. அது யாரையும் காப்பாற்றுவதுமில்லை. யாரையும் விலக்குவதுமில்லை. அது பெய்யத்தான் போகிறது. அகதிகளை, அகதிகளாகவே இருக்கும் மீள் குடியேறிகளை அலைக்கழிக்கத்தான் போகிறது.

காலங்கள் நகர்ந்திருக்கலாம். கள நிலை மாறியிருக்கலாம். ஆனால், சனங்களின் நிலை இன்னும் முழுதாக நகரவில்லை.




# இணையத்தளங்கள் தமிழை வளர்க்க உதவுகின்றனவா?

கணினியின் வருகையும் அதன் புதிய வடிவங்களும் அறிவு முயற்சிகளின் பரிமாற்றங்களிலே வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய பரிமாற்றத்திலே அச்சுக்கலை.

புதிய மறுமலர்ச்சி சிந்தனைகளின் எழுச்சிக்கு ஆற்றியுள்ள அளப்பரிய சேவைகளை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். நூல்களும் பத்திரிகைகளும் கலை - இலக்கிய - செய்திப் பரிமாற்றங்களிலே இன்னும் முன்னணியில் பங்காற்றி வருகின்றன. அவற்றை அச்சிட்டு வெளியிடும் துறையிலே கணினி மயகாக்கலின் பயன்பாடுகள் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை சொல்லித்தான் நீங்கள் அறிய வேண்டியதில்லை. அவற்றின் வடிவமைப்பிலும் அவற்றை வெளியிடும் விரைவிலும் நாள் தோறும் மாற்றங்கள் மேலும் அபிவிருத்தியை நோக்கிய தொடர்கதையாக நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

அச்சுக்கலையை கடந்த காலமாக்கக் கூடிய வகையிலே கணனி மூலம் சாத்தியமாக்கப் பட்டுள்ள புதிய வடிவமான இணையத்தளங்கள் அசாத்திய வளர்ச்சி அடைந்து வருகின்றன. அவற்றின் வளர்ச்சியினால் ஏற்பட்டு வரும் விளைவுகளை நன்மை தீமை என்கிற இரண்டு தலைப்புகளின் கீழ் விரிவாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் சாத்தியமானதே. பரபரப்பான செய்திகளை உலக அரசியலில் இரகசியமானவை என மூடி மறைக்கப்படும் செய்திகளை மக்கள் மன்றத்திலே கொண்டு வரும் விக்கிலீக்ஸ் இணைய-தளம் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதன் ஸ்தாபகர் அவுஸ்திரேலியர்.

வீக்கிலீக்ஸின் மீது நியாயங்கள் பற்றி விரிவான விவாதம் நடத்தலாம். பல பிர-பலமான பத்திரிகைகள் நட்சத்திர எழுத்தாளர் பட்டயம் வழங்கிய சிலர் இணைய தளங்களை உருவாக்கித் தங்களுடைய வக்கிரங்களை கொட்டித் தீர்ப்பதற்கான வடிகாலாக அவற்றைப் பயன்படுத்தி வருதல் மிகவும் வருந்தத்தக்கது. சிலர் பாலியல் வக்கிரங்களுக்கு இரைதேடுவதற்கான தூண்டில்களாக இணையத்தளங்களைப் பயன்படுத்துதல் அருவருக்கதக்கது. புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிலே சிலரும் இணையதளங்களைச் சுய ஆதாயங்களுக்காக மட்டுமே பயன்படுத்தி வருகிறார்கள்.

பிரபாகரன் வீழ்ந்த பின்னர், உலகத் தமிழர் தலைமைத்துவத்தைப் பெற்று விடலாம் என்கிற நப்பாசையிலே, இலக்கிய முதன்மை பெற்றுள்ளமையைத் தோற்றுவிக்கவும், இணைய தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய பித்தலாட்டங்களை வரலாறு மன்னிக்கமாட்டாது, என்பது நமக்கு ஆறுதல். இருந்தபோதிலும் இந்தத் தீய விளைவுகளுக்கு அப்பாலாக இணையதளங்கள் பயனுள்ள தமிழ்ப்பணி ஆற்ற உதவும்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலே இணைய தளங்கள் அடிப்படைத் தமிழ்மொழித் தேர்ச்சியை மேற்கொள்ளவும் தமிழ்ச் சொற்களஞ்சியத்தைச் செறிவாக்கிக் கொள்ளவும் உதவுகின்றன. தமிழ் நாட்டின் கல்வி நிலையங்களிலே பயன்படுத்தப்படும் ஆங்கில தமிழ் அகராதிகளைப் பார்க்கிலும் மிகச் சிறந்த அகராதி ஒன்று இணைய தளத்திலே பயிற்சிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மனித வாழ்க்கைக்குத் தேவையான தகவல்களையும் இணைய தளங்கள் தாங்கி வருகின்றன.

புறாக் கூடுகள் போன்று மனிதக் குடியிருப்புகள் சுருங்கி வரும் நிலையில் நூல்களையும், பாதுகாக்கப் பட வேண்டிய பத்திரிகை நறுக்குகளையும் சேமித்து வைக்க இடமில்லாது தவிக்கும் முன்னேறிய நாடுகளிலே இணைய தளங்கள் சேமிப்பதற்கான மேலதிக இடம் தேடும் இடறிலிருந்து நம்மைக் காப்பாற்றுகின்றன. அத்துடன் பல்கலைக் கழகங்களுக் குச் செல்லாது பட்ட மேற்படிப்புகளை தமிழ் மூலம் மேற்கொள்வதற்கும் இணைய தளங்கள் உதவுகின்றன. நூல்களினாலும் பத்திரிகைகளினாலும் தாவ இயலாத பரப்புகள் எல்லாம் பரவக் தளங்கள் வீறு பெற்றுள்ளன.

தமிழ் மொழியின் விருத்தியை நோக்கமாகக் கொண்டு சில இணைய தளங்கள் வெளிவருகின்றன. தமிழ் மொழியைக் கற்கத் தவறிய இளைய தலைமுறையினருக்கு உதவக் கூடியதாகச் சில இணைய தளங்கள் வெளிவருகின்றன. புலம் பெயர்ந்த நாடுகளிலே பயிலப்படும் மொழிகள் மூலம் தமிழைக் கற்றுக் கொள்ளக் கூடிய விதத்திலே வெளிவந்து கொண்டிருக்கும் இணைய தளங்கள் பாரட்டிற்குரியன. தமிழ் மொழியை களப்படுத்தும் நோக்கில் சில இணைய தளங்கள் வெளிவந்த போதும் இரண்டு இணைய-தளங்களைப் பெயர் சொல்லிப் பாரட்டுதல் தகும். அதில் ஒன்று ஈழத்தமிழர் ஒருவரினால் தமிழ் நாட்டிலிருந்து வெளியிடப்படும் "விருபா" இணையதளமாகும். இதிலே தமிழ் நாட்டிலிருந்து மட்டுமல்லாமல் உலகம் முழவதிலுமிருந்தும் வெளிவருகின்ற தமிழ் நூல்கள் பற்றிய முழு விபரங்களும் வெளியிடப் படுகின்றன.

இன்னொரு இணைய தளமான "தமிழ்ஒதர்ஸ்" என்னும் இணையதளம் கனடாவிலிருந்து வெளிவருகின்றது. இதிலே உலகம் முழுதும் பரந்து வாழும் தமிழ்ப் படைப்பாளிகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளலாம். படைப்பிலக்கியத்துக்கு முதலிடம் அளித்தல் இதன் நோக்கமாகும்

தமிழ் இணையத்தளங்கள் சில தனி நபர் வழிபாட்டை ஊக்குவிக்கின்றன. சில பணம் சம்பாதிக்க முடியுமா என தேடுதல் நடத்துகின்றன. வேறு சில கோஷ்டி அரசியலை முன்னெடுப்பதற்காக நடத்தப் படுகின்றன. இருந்த போதிலும் இந்த நூற்றாண்டின் தமிழ் மொழியினதும் அதன் கலை இலக்கியப் பரம்பலின தும் செவ்வையான ஊடக வடிவமாக இணைய தளங்கள் நின்று நிலவும் என்பதற் கான ஆதாரங்களே வளர்ந்து வருகின்றன.

---

## நீதி அமைச்சு
## தொழில் நியாய சபைச் சுருக்கெழுத்தாளர் (சிங்களம் / தமிழ்/ ஆங்கிலம்) பதவிகள்

நீதி அமைச்சின் கீ ழுள்ள தொழில் நியாய சபை அலுவலகங்களின்

சுருக்கெழுத்தாளர் (சிங் களம்/ தமிழ்/ ஆங்கிலம் ) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு

செய்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த் திசெய் துள்ள இலங்கைப்

பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

1. கல்வித் தகைமைகள்.- (அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம் ) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித் திகளுடன் ஓர் அமர் வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட் சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

2. தொழிற் றகைமைகள்.- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில்

சுருக்கெழுத்துப் பற்றிய 6 மாதங்களுக்குக் குறையாத கற்கை நெறியொன் றைக்

கற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பரீ ட்சையில் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பாடத்தில் திற மைச்சித்தி பெற்றிருத்தல்.

3. உடற்றகைமைகள்.- (அ) தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு உகந்த சிறந்த உள மற்றும் உடல் ரீதியான சுகாதார நிலைமையில் இருத்தல்

(ஆ) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த சுகாதார நிலைமையைக் கொண்டிருத்தல்.

4. பிற.- (1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரர் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(3) தகைமைகளை உறுதிப் படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண் ணப்பத்துடன் சமர் ப் பிக்க வேண் டும்.

5. வயதெல்லை.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்படுகின்ற இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

6. சம்பள அளவுத்திட்டம்.- எம் என் 1-2006ஏ- மாதாந்தம் ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 ரூபா 22, 040.

7. சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.- மேற் குறித்த தகைமை

களைப் பூர்த்திசெய்துள்ள விண் ணப்பதாரர்கள் நீ தி அமைச்சின் செயலாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட வேறொரு நிறுவனத்தின் மூலம்

நடாத்தப் படுகின்ற தொழிற் பரீட்சையில் மற்றும் அமைப் பு முறையான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மேல் திறமைகளின் முறைப்படியும் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைப்படியும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

8. சேவை நிபந் தனைகள்.- (அ) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய முரித்துடையதுமாகும். விதவைகள் ஃ தபுதாரர் கள், அநாதைகள் ஓய்வூதியத்

திட்டத்திற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும்

(ஆ) இப்பதவிக் கான வினைத் திறமைகாண் தடைப்பரீ ட்சைகள் ஆண்டொன்றுக்கு இரு முறை நீதிச் செயலாளரால் நடாத்தப்படும்.

9. இவ்வறிவித்தலின் கீழே தரப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக தயார் செய் துகொண்ட விண்ணப்பங் களைச் சரியாகப் பூர்த்தி செய்து 2012. 11.02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ

பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண் டும். விண்ணப்பத்தை இட்டு அனுப் பும் கடித உறையின் இடதுமேல் மூலையில் "தொழில் நியாய சபைச் சுருக்கெழுத்தாளர் சிங்களம்/ தமிழ் / ஆங்கி லம் பதவி"" எனக் குறிப்பிடுதல் வேண்டும் . ஏற்கனவே அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப் பங்களைத் தமதுதிணைக்கள/ நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்ப வேண்டும் :-

செயலாளர் ,
நீதி அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12.

10. பரீ ட்சைக் கட் டணம்.- பரீட்சைக் கட் டணமாக ரூபா 300

தொகையொன்று "செயலாளர், நீதி அமைச்சு" என்னும் பெயரில் மக்கள்

வங்கியின் நகர மத் தி கிளை-யின் 176-1001-9-9025-184 ஆம் கணக்கு

இலக்கத் தில் வரவுவைக்கக் கூடியவாறு ஒவ் வொரு பரீட் சார்த்தியினாலும் செலுத்தப்படுதல் வேண்டும். பணம் செலுத்தப் பட்ட பற்றுச் சீட்டு விண்ணப்

பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பரீட்சைக் கட் டணங்கள் எக்காரணத்

தைக் கொண்டும் மீ ளச் செலுத்தப்பட மாட்டாது.

11. விண்ணப்பம் சரியாகப் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். தாமதமாகக்

கிடைக் கப்பெறும் விண்ணப் பங்கள் எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்

படுவதுடன் , விண்ணப்பம் அல்லது அது தொடர் பான கடிதங்கள் தபாலில்

காணாமற் போய்விட்டதாகச் செய்யப் படும் முறைப்பாடுகள் கவனத்திற்

கொள்ளப்பட மாட்டாது.

12. விண்ணப் பதாரர் ஒருவரின் விண்ணப் பத் தில் ஏதேனுமொரு

பொய் யான தகவல் இருப் பதன் காரணமாக அவரைத் தகு தியற் றவராக்குவ தற்கும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரிய வருமிடத்து அவர் சேவையி

லிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு.

இதில் குறிப்பிடப் படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் தீர்மானிக்கும்

அதிகாரத்தை நீதி அமைச்சின் செயலாளர் கொண்டுள்ளார்.

*கமலினீ த சில்வா,*
*செயலாளர் ,*
*நீதி அமைச் சு.*
*நீதி அமைச்சு,*
*கொழும்பு 12.*

### மாதிரி விண்ணப்பப்படிவம்

நீதி அமைச்சு

.......................................................

........................ பதவி

(அலுவலக உபயோகத்திற்காக)

1. முழுப்பெயர் (சிங்களத்தில்ஃ தமிழில் ) :----.

ஆங்கிலத்தில் :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத் தில்ஃ தமிழில்) :----.

ஆங்கிலத்தில் :----.

3. நிரந் தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

ஆங்கிலத்தில் :----.

4. அலுவலக முகவரி :----.

5. தொலைபேசி இலக்கம் :----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

7. பிறந்த திகதி :----.

8. 30.12.2012 ஆந்திகதிக் கு வயது :-

வருடங்கள் .......................

மாதங்கள் .......................

நாட்கள் .......................

9. ஆணாஃ பெண்ணா ? என்பது :----.

10. இனம் :----.

11. கல்வி கற்ற மொழி மூலம் :----.

12. விண் ணப்பிப்பது சுருக்கெழுத்தாளர் (சிங் களம்) பதவியா, (தமிழ்)

பதவியா, (ஆங்கில) பதவியா என்பது :----.

13. கல்வித் தகைமைகள்-

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :-

ஆண்டு :----, சுட்டெண் :----.

பாடம் சித்தி

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :

ஆண்டு :----, சுட்டெண் :----.

பாடம் சித்தி

14. தொழிற்றகைமைகள் :----.

15. அனுபவம் :----.

16. பிற தகைமைகள் :----.

17. இவ்விண் ணப் பப் படிவத்தில் என் னால் தரப் பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை யெனவும், சரியானவையெனவும் அத்தாட் சிப்படுத்துகிறேன். இதில் அடங்கிய தகவல்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வருமிடத்து நான் தகுதியற்றவனாவேன் எனவும், நான் தெரிவு செய்யப் பட்ட பின்னர் தெரிய வருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி, சேவையிலிருந்து விலக் கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

திணைக்கள/ நிறுவனத் தலை-வரின் சான்றிதழ் இவ்விண்ணப் பத்தைச் சமர் ப்பிக் கும்

.............................................

என் பவர் இத்திணைக்களத் தில்/ நிறுவனத்தில் சேவை செய்கின்றார் என்றும் அவர் மேற் குறித்த பதவிக்காக தெரிவுசெய் யப் பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்ஃ முடியாது.

திணைக்கள/ நிறுவனத் தலை-வரின்

கையொப்பம்.

(அலுவலக முத்திரை)



# டெங்கு நோய்த்தாக்கத்திலிரு
# எம்மை நாமே பாதுகாத்து கொள்

டெங்கு காய்ச்சல் (Dengue fever) அல்லது எலும்பு முறிவுக் காய்ச்சல் மனிதர்களிடையே டெங்கு வைரசால் ஏற்படும் ஒரு அயனமண்டலத் தொற்றுநோய் ஆகும், இது கொசுக்களால் பரவுகிறது. இந்நோய் வந்தால் கடும்காய்ச்சலுடன் கடுமையான மூட்டு வலி, தசை வலி, தலைவலி, தோல் நமைச்சல் போன்ற உணர்குறிகள் ஏற்படும். தொற்றுநோய் தீவிரமடைந்த நிலையில் உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் டெங்கு குருதிப்போக்குக் காய்ச்சல் (கடுமையான குருதிப்போக்கை ஏற்படுத்தும்) மற்றும் டெங்கு அதிர்ச்சிக் கூட்டறிகுறி என்பன உண்டாகும். இது உயிர் ஆபத்துகளை விளைவிக்க கூடிய ஒரு கொடிய நோயாகும். இது உடலை மிகவும் வருத்தும் நோய் ஆகையால் என்பை முறிக்கும் காய்ச்சல் (breakbone fever) எனவும் அழைக்கப்படும்.

வடக்கு ஆர்ஜெண்டீனா, வடக்கு அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், பார்படோஸ், பொலிவியா, பெலிஸ், பிரேசில், கம்போடியா, கொலம்பியா, கோஸ்ட்டா ரிக்கா, கியூபா, பிரான்ஸ், கௌதமாலா, குயான, ஹெயிட்டி, இந்தியா, இந்தோனேசியா, இலங்கை போன்ற வறண்ட, உலர் வெப்ப வலய நாடுகளில் இந்த நோய் பெரும்பாலும் பரவுகின்றது.

டெங்குக் காய்ச்சலின் நோய்க்காரணி ஒரு தீநுண்மம் (வைரசு) ஆகும். இது ஒரு ஆர்.என்.ஏ தீநுண்மம் ஆகும். இது மஞ்சட் தீநுண்மக் குடும்பம், மஞ்சள் தீநுண்மப் பேரினத்தைச் (இலங்கை வழக்கு: இனம்) சார்ந்தது. மஞ்சள் காய்ச்சல் தீநுண்மம், மேற்கு நைல் தீநுண்மம், யப்பானிய மூளையழற்சித் தீநுண்மம் போன்றனவும் மஞ்சள் தீநுண்மப் பேரினத்தில் அடங்குகின்றன. இவை நோய்க்காவிகளால் காவப்பட்டு ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரப்பப்படுகின்றது. பெரும்பாலும் கணுக்காலிகளால் (கொசுக்கள் அல்லது தெள்ளுகள்) காவப்படுகின்றன, எனவே கணுக்காலிகள் காவும் தீநுண்மங்கள் எனும் ஆங்கிலப் பெயரைச் சுருக்கியதன் மூலம் உருவான (arbo: arthropod-borne viruses) ஆர்போ எனும் பெயர் கொண்டும் அழைக்கப்படுகின்றன.

**டெங்குக் காய்ச்சல் தீ நுண்மம்:**

டெங்குத் தீநுண்மத்தின் மரபணுத்தொகை 11,000 நியூக்கிளியோட்டைடு அடிக்கூறுகளைக் கொண்டுள்ளது, இவ்வை மூன்று வெவ்வேறு புரத மூலக்கூறுக்களை (ஊ, ிசஆ, நு) உருவாக்குவதில் மரபணுக்குறியாகப் பயன்படுகின்றன, இப் புரத மூலக்கூறுகளே தீநுண்மத் துகளை உருவாக்குகின்றன. ஏனைய ஏழு வகையான புரத மூலக்கூறுகள; (NS1, NS2a, NS2b, NS3, NS4a, NS4b, NS5) தொற்றுநோய்க்கு உட்பட்டவரின் உயிரணுக்களில் தீநுண்மத்தின் பெருக்கத்துக்குத் தேவைப்படுகின்றது.

டெங்குத் தீநுண்மத்தின் இனத்தில் நான்குவகையான குருதிப்பாய (serotype) வகைகள் (DENV-1, DENV-2,DENV-3, DENV-4) உள்ளன. இந்த நான்கு வகையும் தனித்தனியே முழு அளவிலான நோயை ஏற்படுத்த வல்லன.ஜ4ஸ ஒரு குறிப்பிட்ட குருதிப்பாய வகையால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஆயுள் முழுவதும் அக் குருதிப்பாய வகையிலிருந்து நோயெதிர்ப்பு கிடைக்கின்றது, ஏனைய மூன்று வகையில் இருந்தும் நோயெதிர்ப்பு உருவான போதிலும் அவை குறுகிய காலத்துக்கே நீடிக்கின்றன. டெங்குத் தீநுண்மத்தில் இருந்து முற்று முழுதாக நோயெதிர்ப்பு உருவாக வேண்டுமெனின் குறித்த நபர் ஒருவருக்கு இந் நான்கு குருதிப்பாய வகைத் தீநுண்மங்களும் நோயை உருவாக்கி இருக்கவேண்டும், ஆனால் இரண்டாம் முறை தொற்று ஏற்படுவது நோயாளிக்கு மிகக் கடுமையான பாதிப்பை உண்டாக்கும். DENV-1 குருதிப்பாய வகையால் தொற்று ஏற்பட்டு மீண்டும் DENV-2 அல்லது DENV-3 யால் தொற்று ஏற்படல், DENV-3யால் முதலில் தொற்று ஏற்பட்டு பின்னர் னுநுஏ-2யால் ஏற்படல் போன்றவற்றில் கடுமையான விளைவுகள் ஏற்படும்

**நோய்க்காவி:**

ஏடிசு எனப்படும் பேரினத்தைச் சேர்ந்த பல இனங்கள் இந்த நோயின் நோய்க்காவியாகும். தீ நுண்மத்தால் பாதிக்கப்பட்ட ஏடிசு (யுநனநள) வகைக் கொசுக்களால் (இலங்கை வழக்கு: நுளம்பு), குறிப்பாக ஏடிசு எகிப்தியால், இந்நோய் பரவுகிறது. ஏடிசு எகிப்தி ஒருவரைக் கடிக்கின்றது. ஏடிசு எகிப்தி கொசு ஒருவரைக் கடித்து தனது குருதி உணவைப் பெற்றுக்கொள்கின்றது

இக்கொசுவை இலகுவில் அடையாளம் காணக்கூடிய சிறப்பம்சமாக கருநிறக் காலில் வெள்ளை வரிகள் காணப்படும். இக்கொசுக்கள் பொதுவாக பகலிலேயே மனிதர்களைக் கடிக்கின்றன. பொதுவாக விடியற்காலையிலும் பிற்பகலிலும் இக்கொசு கடிக்கின்றது. டெங்குத் தீநுண்மம் காவும் வேறு ஏடிசு இனங்களாவன: A. albopictus, A. polynesiensis, A. scutellaris

மனிதனே முதன்மை வழங்கியாக இருப்பினும், குரங்கினத்தின் இடையேயும் தீநுண்மங்கள் சுற்றி வருகின்றன. ஒரு தரம் கொசு கடிப்பதே நோய் உண்டாவதற்கு வழிகோலும். நோயுள்ள ஒருவரைக் கடித்த உடனேயே நோயற்றவரை இக்கொசு கடிக்குமாயின் தீநுண்மங்கள் பரவக்கூடும். இதைவிட, பெண் கொசு தனது குருதி உணவை நோய் தொற்றியுள்ளவரிடம் இருந்து பெற்ற பின்னர், கொசுவின் குடற்கலங்களை தீநுண்மங்கள் அடைகின்றன. 8 - 10 நாட்கள் கழிந்து கொசுவின் ஏனைய இழையங்களுக்குத் தீநுண்மங்கள் பரவுகின்றன, இவ்வகையில் உமிழ்நீர்ச் சுரப்பியையும் அவை சென்றடைகின்றன. நோயில்லாத ஒருவரை இக்கொசுக்கள் கடிக்கும் போது தீநுண்மங்கள் செறிந்த தமது உமிழ்நீரை அவருக்குள் செலுத்துகின்றன, இதன் மூலம் அவரும் தொற்றுக்கு உள்ளாகின்றார். எனவே கொசுவானது உடனேயோ அல்லது 8-10 நாட்கள் சென்ற பின்னரோ நோய்க்காவியாகத் தொழிற் படுகின்றது

இத் தீநுண்மங்கள் கொசுவுக்கு கேடுதரும் விளைவுகள் ஏற்படுத்துவதில்லை, இவை கொசுவின் ஆயுட்காலம் ( பொதுவாக 21 நாட்கள்) முழுவதிலும் தொற்றி இருக்கின்றன மனிதனுக்கு அருகாமையில் உள்ள செயற்கையான நீர்நிலைத் தேக்கங்களில் முட்டை இடுவதை ஏடிசு எகிப்திக் கொசுக்கள் விரும்புகின்றன, எனவே தமது குருதி உணவுஉணவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

குருதி மாற்றீடு, உறுப்பு மாற்றீடு (Organ transplantation) போன்ற சந்தர்ப்பங்களிலும் நோய்த் தொற்றுள்ள குருதி மூலம் டெங்குத் தீநுண்மங்கள் பரவுகின்றன. கர்ப்பிணித் தாயில் இருந்து சேய்க்கும் அல்லது பிறப்பின்போதும் பரவிய நிகழ்வுகள் அறியப்பட்டுள்ளன. இது ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு நேரடித்தொடுகை மூலம் பெரும்பாலும் பரவுவதில்லை, எனினும் வழமைக்கு மாறாக அத்தகைய நிகழ்வுகளும் அவதானிக்கப்பட்டுள்ளன.

**எளிதில் பாதிப்படைபவர்:**

குழந்தைகளிலும் சிறுவர்களிலும் கடுமையான நோய் உண்டாகின்றது.ஆண்களைக் காட்டிலும் கூடுதலாக பெண்கள் பாதிப்படைகின்றனர்.ஜ5ஸ நீரிழிவு, ஈழை நோய் போன்ற நீண்டகால நோய்கள் உள்ளவருக்கு இந்நோய் மிகவும் உயிருக்கு தீங்குவிளைவிக்கக் கூடிய பாதிப்பை உண்டாக்கும்.

**நோயியல்:**

டெங்குத் தீநுண்மத்தைக் காவும் கொசு ஒருத்தரைக் கடிக்கும்போது அக்கொசுவின் உமிழ்நீருடன் தோற் பகுதிக்கு தீநுண்மம் செல்கின்றது. பின்னர் வெண்குருதியணுக்களுடன் ஒட்டிக்கொண்டு அவற்றின் உள்ளே நுழைந்து இனம் பெருகுகின்றது. வெள்ளணுக்கள் இதற்கு மறுவினையாக, இனம்பெருகலைத் தடுப்பதற்குரிய இன்டெர்பெரோன் போன்ற சமிக்ஞைப் புரதங்களைத் தயாரிக்கின்றன, இதுவே காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்படுவதற்குக் காரணம் ஆகின்றது.

கடுமையான தொற்றில் தீநுண்மத்தின் தன்பிரதி அமைத்தல் மிகையாகின்றது கல்லீரல், என்புமச்சை போன்ற பல்வேறு உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. குருதிக்குழாயில் இருந்து நீர்மங்கள் வெளியே கசியத் தொடங்கும். குருதிக்குழாய்ச் சுவரின் ஊடுபுகவிடு தன்மை கூடுவது இதற்குக் காரணமாகின்றது. இவற்றின் காரணமாக குருதிக்குழாய்களுள் குறைவான அளவு குருதி உடலில் சுற்றோட்டத்துக்கு உட்படுகின்றது, இதனால் குருதி அழுத்தம் குறைகின்றது, முக்கிய உறுப்புகளுக்கு போதியளவு குருதி விநியோகம் கிடைப்பது தடைப்படுகின்றது. என்புமச்சையின் பாதிப்பால் குருதிச் சிறுதட்டுக்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படுகின்றது, எனவே குருதி உறைதலைக் கட்டுப்படுத்தும் தொழிற்பாட்டுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது, இதனால் குருதிப்பெருக்கு உண்டாகும் தீங்கு ஏற்படுகின்றது.

**தீநுண்மம் தன்பிரதி அமைத்தல்:**

தோலின் உள்ளே வந்தடைந்த தீநுண்மம் இலங்ககான் உயிரணுக்களுடன் (தோலில் அமைந்துள்ள கிளையி உயிரணுக்கள் கூட்டம், இவை நோய்க் காரணியைக் கண்டறிகின்றன) பிணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. தீநுண்மங்களின் சூழ்உறையில் (envelope) உள்ள புரதங்கள் இலங்ககான் உயிரணுக்களில் உள்ள புரத ஏற்பிகளுடன் பிணைப்பை ஏற்படுத்தி உயிரணு உள்வாங்கல் (endocytosis) முறை மூலம் அவற்றுள் புகுகின்றன. இதன்போது தீநுண்மம் அகவுடல் (endosome) எனும் உருண்டை வடிவப் பகுதியால் சூழப்பட்டு குழிய முதலுருவை அடைகின்றது, அங்கே அமிலத்தன்மை கூடுகின்றது (pH குறைகின்றது), இதன்போது தீநுண்ம சூழ்உறைப்புரதம் தனது வடிவத்தை மாற்றுகின்றது, இச் செயற்பாடு அகவுடலில் இருந்து தீநுண்மம் வெளியேற உதவுகின்றது. இப்போது சூழ்உறை அகன்று, தீநுண்மம் புரத உறையுடன் (உயிளனை) வெளியே வருகின்றது. புரத உறையும் உடைந்து அகன்றுவிட, தீநுண்மத்தின் ஆர்.என்.ஏ இழைகள் வெளியேறி அகக்கலவுருச் சிறு வலையை அடைகின்றது, அங்கே புதிய தீ நுண்மத்துக்கான புரதம் தொகுக்கப்படுகின்றது. முதிர்ச்சியடையாத தீ நுண்மத் துகள்கள் கொல்கிச் சிக்கலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இறுதியில் தொற்றுக்குட்படுத்தப்பட்ட உயிரணுவில் இருந்து உயிரணு வெளித்தள்ளல் (நஒழ-உலவழளளை) முறைமூலம் முதிர்ந்த பல தீநுண்மங்கள் வெளியேறி வேறு உயிரணுக்களை (வெள்ளணுக்கள்) நாடுகின்றன.

சில தீநுண்ம குருதிப்பாய வகைகள் இன்டெர்பெரோன் உருவாகும் வேகத்தைக் குறைக்கின்றன என்று அறியப்பட்டுள்ளது. இன்டெர்பெரோன்கள் நோயெதிர்ப்புத் தொகுதியை எச்சரிக்கை செய்யும் வேளையில் பிறபொருளெதிரிகள், T-உயிரணுக்கள் உருவாக்கப்படுகின்றன, இவை தீநுண்மம் உள்ள உயிரணுக்களை தாக்குவதற்கு




# ந்து
# வோம்

செல்கின்றன. வெவ்வேறுபட்ட பிறபொருளெதிரிகள் உருவாக்குகின்றன் அவற்றுள் சில, தீநுண்மப் புரதங்களுடன் பிணைப்பை ஏற்படுத்தி அவற்றை தின்குழியங்களுக்கு அனுப்பி தின்குழியமை முறைமூலம் அகற்ற உதவுகின்றன. இம்முயற்சி சிலவேளை பிழைத்தால், தீநுண்மங்கள் தின்குழியங்களால் அழிக்கப்படுவதற்குப் பதிலாக தின்குழியங்கள் உள்ளேயே நுழைந்து பல்கிப் பெருகும்.

**நோயின் அறி உணர்குறிகள்:**

முதன்முதலில் நோயின் தொற்றுக்குள்ளானவர் பெரும்பாலும் ( 50 90%) அறி உணர்குறிகளின்றிக் காணப்படுவர், அல்லது கேடில்லாத காய்ச்சல் மட்டுமே இருக்கும், ஏனையோர் டெங்குவின் மரபார்ந்த அறிகுறிகளைக் கொண்டிருப்பர், அவையாவன: திடீரென அதிகரித்துச் செல்லும் மிகையான காய்ச்சல், தலைவலி, கண் பின்பகுதி வலி, உடல்வலி (தசை, எலும்பு வலி), களைப்பு, வாந்தி, குமட்டல், தொண்டைப்புண், சுவையில் மாற்றம், தோல் தடித்து சிவப்படைந்து சினைப்பு உண்டாதல். இவர்களுள் சிறிய பகுதியினர் (5%) நோய் கடுமையாக்கி காணப்படுவர். ஏற்கனவே ஒரு குருதிப்பாய வகை




தீநுண்மத்தால் பாதிப்புற்ற சிறிய வீதமான மக்களில் மீண்டும் பிறிதொரு குருதிப்பாய வகைத் தொற்று ஏற்படின் குருதிக்குழாய்களில் சிதைவு ஏற்பட்டு குருதிப்போக்கு உண்டாகும் தீவிளைவு உண்டு, இத்தகைய நிலைமை டெங்குக் குருதிப்போக்குக் காய்ச்சல் எனப்படும்.

நோயரும்பு காலம் (கொசு தீநுண்மத்தை செலுத்தியதில் இருந்து அறிகுறிகள் தோன்றும் காலம்) 3 - 14 நாட்களாகும், சராசரியாக 4 - 7 நாட்கள். எனவே அயன மண்டலப் பகுதிகளில் இருந்து வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்பவர், அங்கு வருகை தந்து 14 - .16 நாட்களுக்கும் மேற்பட்டால் டெங்குக் காய்ச்சல் ஏற்பட வாய்ப்பில்லை. அதேவேளையில் அக்குறிப்பிட்ட காலப் பகுதியில் அறிகுறிகள் தென்படின் டெங்குக் காய்ச்சலாக இருக்கலாம் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டியது முக்கியமானது.

**நோயின் பருவங்கள்:**

நோயின் பருவங்களை மூன்றாகப் பிரிக்கலாம்: காய்ச்சல், கடுமையான பருவம், மீள்நிலைப் பருவம். நோயரும்பு காலப் பகுதியை அடுத்து, முக்கிய அறிகுறியான காய்ச்சல் உடனே தோன்றி மிகையாகும். உடல் வெப்பநிலை 40 °C (104 °F)க்கு மேற்செல்லும், இதனுடன் கடுமையான தலைவலி, குறிப்பாக கண்களின் பிற்புறத்தே வலி தோன்றும். பொதுவாக காய்ச்சல் இரண்டு தொடக்கம் ஏழு நாட்களுக்கு நீடிக்கும். வெகு அரிதாக ஆனால் சிறார்களில் பொதுவாக, இக் காய்ச்சல் 2 - 5 நாட்களுக்கு நீடித்து, பின்னர் ஓரிரு நாட்களுக்கு இராது, மீண்டும் காய்ச்சல் ஓரிரு நாட்களுக்குத் தோன்றும், பின்னர் அறவே நிற்கும். பத்து நாட்களுக்கு மேலே காய்ச்சல் நீடித்தால் அது டெங்குக் காய்ச்சலாக இருக்கும் சாத்தியக்கூறுகள் குறைவு. இப்பருவத்திலே ஏனைய அறிகுறிகள் காணப்படும். அவையாவன:

**தலைவலி, கண் பின்புற வலி, பொதுவான உடல் வலி (தசை வலி, மூட்டு வலி), குமட்டலும் வாந்தியும் வயிற்றுக்கடுப்பு**
**தோல் சினைப்பு: அடி முட்டிகளில் பொதுவாகவும், சிலருக்கு உடல் முழுவதுமே அரிப்பு ஏற்படலாம்**
**பசியின்மை, தொண்டைப்புண்,**
**மிதமான குருதிப்போக்கு (பல் ஈறுகளில் இருந்து குருதி வடிதல், மூக்கில் இருந்து குருதி வடிதல், மாதவிடாய் மிகைப்பு, சிறுநீரில் குருதி போதல், குருதிப்புள்ளிகள் -- petechiae), நிணநீர்க்கணு வீக்கம்**
**வெள்ளை அணுக்கள், குருதிச் சிறுதட்டுக்கள் குறைதல்**

**டெங்கு நோயின் உணர், அறிகுறிகள்:**

காய்ச்சல் தொடங்கியுள்ள காலப்பகுதியில் தோல் நமைச்சல், சினைப்பு தோன்றக்கூடும். முதல் அல்லது இரண்டாம் நாள் (காய்ச்சல் மற்றும் மற்றைய அறிகுறிகள் தோன்றியதில் இருந்து) தோலின் சில பகுதிகள் சிவப்பு நிறமாக மாறும். அடுத்த 4-7 நாட்களில் சின்ன முத்து நோயில் உண்டாகும் சினைப்பைப் போன்று சிறிய சிறிய சிவப்பாலான புள்ளிகள் போன்ற தோற்றம் பெறும். முதலில் உடலிலும் பின்னர் முகத்திலும் நமைச்சல் தோன்றும். இந்நிலையில் குருதி நுண் குழாயில் (குருதி மயிர்த்துளைக்குழாய்) கசிவு ஏற்பட்டு வாய், மூக்கு போன்ற பகுதிகளில் சிறியளவிலான குருதிப் போக்கு உண்டாகாலாம்.

சிலருக்கு இந்நோய் கடுமையான பருவத்தைக் கொண்டிருக்கும். காய்ச்சல் முடிவடைந்த பின்னர் ஏற்படும் இப் பருவம் ஓரிரு நாட்கள் நீடிக்கும். இப்பருவத்தில் உடலில் நீர்மத்தேக்கம் ஏற்படும். குருதி நுண் குழாயின் ஊடுபுகவிடும் தன்மை அதிகரித்து கசிவு ஏற்படலால் நெஞ்சறை, வயிற்றுப் பகுதிகளில் நீர்மத்தேக்கம் உண்டாகின்றது. இதனால் சுவாசச் சிக்கல், வயிறு புடைத்தல் ஏற்படும். இப்பருவத்தில் உறுப்புகள் செயலிழப்பு, கடும் குருதிப்போக்கு (முக்கியமாக, இரையகக் குடலியத் தொகுதியில்) என்பன ஏற்படும். சிகிச்சை அளிக்கப்படாத நிலையில் இது அடுத்த கட்ட நிலையான டெங்கு அதிர்ச்சிக் கூட்டறிகுறிக்குச் செல்லும். வயிற்று வலி, வாந்தி, அமைதியின்மை போன்றவற்றுடன் பொதுவான அதிர்ச்சியின் அறிகுறிகளும் இதன்போது ஏற்படும். டெங்கு தொற்றுக்குட்பட்டவருள் 5% மானவரிலேயே இக் கடுமையான அறிகுறிகள் தோன்றுகின்றது, ஏற்கனவே டெங்கு தீநுண்மத்தின் பிறிதொரு குருதிப்பாய வகையால் பாதிக்கப்பட்டோருக்கு இவ்வறிகுறிகள் மிகவும் கடுமையாக இருக்கும்.

அடுத்ததாக மெதுவாக நிகழும் மீள்நிலைப் பருவம், இதில் குருதிக்குழாய்க்கு வெளியே கசிந்த நீர்மம் குருதிக்குழாய்க்குள் இழுக்கப்பட்டு குருதியை அடையும். இது இரண்டு, மூன்று நாட்களுக்கு நீடிக்கும். இந்நிலையின் போது நமைச்சல், தாழ் இதயத் துடிப்பு போன்றன காணப்படலாம், மேலும் நீர்ம அதிகரிப்பு இந்நிலையில் ஏற்பட்டால் மூளையைப் பாதித்து சுயநினைவு இழத்தல், வலிப்பு போன்றவற்றை உண்டாக்கலாம். நோயின் பின்விளைவுகளில் கல்லீரல் பாதிப்பு ஏற்படலாம். இது டெங்கு கல்லீரல் அழற்சி எனப்படும்.

**அறுதியிடல், எச்சரிக்கைக் குறிகள், வயிற்று வலி வாந்தி எடுத்துக் கொண்டிருத்தல்,கல்லீரல் வீக்கம் மென்சவ்வுக் குருதிப்போக்கு (மூக்கு, வாய்), உயர் சிவப்பணுக் கனவளவு வீதம், தாழ் குருதிச் சிறுதட்டுகள், சோர்வு**

நோய்த்தொற்று பரவியுள்ள ஊர்ப்பகுதிகளில் நோயாளியின் அறிகுறிகளையும் மருத்துவரின் பரிசோதனையும் வைத்து அறுதியிடப்படுகின்றது, எனினும் ஆரம்பகட்ட நோய்ப் பருவத்தை ஏனைய தீநுண்ம நோய்களில் இருந்து வேறுபடுத்தி அறிவது சுலபமாக இராது. சரியான அறுதியிடலுக்கு, காய்ச்சலுடன் பின்வரும் அறிகுறிகளில் குறைந்த பட்சம் இரண்டேனும் இருத்தல் வேண்டும்: குமட்டலும் வாந்தியும், தோல் சினைப்பு, உடல் வலி, குறைவான வெண்குருதியணுக்கள், நேரான குருதியடக் குவடப் பரிசோதனை, அல்லது அட்டவணையில் காட்டப் பட்டுள்ள ஏதாவது எச்சரிக்கைக் குறிகள். எச்சரிக்கைக் குறிகள் கடுமையான நோய் உருவாக முன்னர் தோன்றும்.


குருதியடக்குவடப் பரிசோதனை உடனடியாக நோயைக் கண்டறிய துணைபோகின்றது. குருதியழுத்தமானியின் குருதியடக்குவடத்தை ஏறத்தாழ 100 மில்லிமீட்டர் இரசம் அழுத்தத்தில் ஐந்து நிமிடங்களுக்கு மேற்கையில் வைத்திருக்கவேண்டும், பின்னர் அவ்விடத்தில் சிவப்புப் புள்ளிகள் தோன்றுகின்றனவா என்பதை அவதானிக்க வேண்டும், அதிக எண்ணிக்கையிலான புள்ளிகள் தோன்றின் குருதியடக்குவடப் பரிசோதனை நேரானது, அதாவது டெங்கு குறித்த நபருக்கு இருக்கலாம் என்று அறியலாம். சிக்குன்குனியா நோயில் இருந்து டெங்குவை வேறுபடுத்தலில் சிக்கல்கள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுகூடப் பரிசோதனை:**

ஆய்வுகூடப் பரிசோதனையில் முழுமையான குருதியணுக்கள் எண்ணிக்கை கணக்கில் எடுக்கப்படும், நோயின் ஆரம்பகாலத்தில் வெண்குருதியணுக்கள் குறைவடைவதை அவதானிக்கலாம், அதன் பின்னர் குருதிச் சிறுதட்டுகள் குறைவது (< 100 x 109ஃலீட்டர்) தோன்றும். ஜ15ஸஅசுபார்ட்டேட் அமினோட்ரான்சுபெரேசு, அலனின் அமினோட்ரான்சுபெரேசு போன்ற நொதிகளின் அளவுகள் மிகையாகும். இவை ஆரம்ப காலத்தில் உயர்வடையத் தொடங்கி இரண்டு வாரத்தில் உச்ச நிலையை அடையும்.

நோயின் கடுமை கூடும்போது, குருதிப்பாயம் குறைவதால் குருதியின் அடர்த்தி கூடும், இதை சிவப்பணுக் கனவளவு வீதம் (hematocrit) கூடி இருப்பதை வைத்து உறுதி செய்யலாம். அல்புமின் புரதம் குருதியில் குறைந்துள்ளதும் இங்கு அவதானிக்கலாம். மருத்துவரின் நேரடிப் பரிசோதனை மூலம் பெரிதளவில் ஏற்பட்டுள்ள நுரையீரல் உறை நீரேற்றம் மற்றும் வயிற்றில் நீர்க் கோர்ப்பு என்பவற்றை அறியலாம், எனினும் மீயொலி நோட்டம் மூலம் துவக்கத்திலேயே அறியலாம், இது அதிர்ச்சி வருவதை முற்கூட்டியே அறிய வழிவகுக்கின்றது.

சிறுநீர்ப் பரிசோதனையில் சிறுநீருடன் குருதி சேர்ந்திருப்பதை அவதானிக்கலாம். சிறுநீர், குருதி, மூளை தண்டுவடத் திரவம் போன்றவற்றை நுண்ணுயிரியல்




ஆய்வுகூடப் பரிசோதனைக்கு அனுப்புதல் வேறு நோய்களுடன் இருந்து வேறுபடுத்திக்கொள்ள உதவுகின்றது. நெஞ்சறை எக்சு-கதிர்ப் படம் மூலம் நுரையீரல் உறை நீரேற்றம் உள்ளதென்பது உறுதிப்படுத்தப்படும்.

**நுண்ணுயிரியல் ஆய்வுகூடப் பரிசோதனை:**

ஆய்வுகூடத்தில் தீநுண்மத்தை வேறுபடுத்தி அவதானிக்கலாம், இதற்கு உயிரணுவில் தீநுண்மம் வளர்த்தல், கருவமில ஆய்வு, தீநுண்ம பிறபொருளெதிரியாக்கியை அல்லது பிறபொருளெதிரிகளைக் கண்டறிதல் துணைபோகின்றது. ஆனால் இத்தகைய பரிசோதனைகள் மிகவும் செலவு கூடிய காரணத்தால் எல்லா இடங்களிலும் நடத்தப்படுவதில்லை.

**பண்டுவ (மருத்துவ) முறை:**

நோய்க்கான குறிப்பிட்ட மருந்து இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. எனினும் பெரும்பாலும் இந்நோய் இரண்டு வாரங்களில் குணமாகி விடுகிறது. நல்ல ஓய்வு, நிறைய நீர்ம உணவு உட்கொள்ளுதல், காய்ச்சலுக்குத் தகுந்த மருந்து உட்கொள்தல் போன்றவை நோயின் கடுமையைக் குறைக்க உதவும். மருத்துவமனையில் செய்யும் சிரைமூல நீர்ம ஈடு, குருதிப்பரிமாற்றம் போன்றவை நோயைக் கட்டுப்படுத்துகின்றது. மருத்துவமனையில் அனுமதிக்கலாமா இல்லையா என்பது எச்சரிக்கைக் குறிகளை வைத்துத் தீர்மானிக்கப்படுகின்றது.

காய்ச்சலுக்கு பரசிட்டமோல் பயன்படுத்தப்படுகின்றது. அஸ்பிரின், இயக்க ஊக்கி மருந்துகள் (corticosteroids), அழற்சிக்கு எதிரான இசுட்டீரோய்டு இல்லாத மருந்துகள் அறவே பயன்படுத்தல் கூடாது, ஏனெனில் இவை குருதிப்போக்கை மேலும் மிகையாக்கிவிடும். மேலும் தசை வழியே ஊசி போடுதல் போன்ற குருதிப்பெருக்கை ஏற்படுத்தவல்ல மருத்துவ முறைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

நோயின் மீள் நிலைப் பருவத்தில் சிரைவழியான நீர்மம் செலுத்துதல் நிறுத்தல் அவசியமாகின்றது, ஏனெனில் இப்பருவத்தில் நீர்ம அதிகரிப்பு நிலை உண்டாகும்.

**தடுப்பு முறைகள்**

1920 ஆம் ஆண்டு நிழற்படம், கொசுவின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தேங்கி இருக்கும் நீர்நிலைகளில் இருந்து நீரை அகற்றும் முயற்சி நடைபெறுகின்றது.

டெங்கு காய்ச்சலை உண்டாக்கும் தீ நுண்மத்தில் நான்கு குருதிப்பாய வகைகள் உண்டு எனவே ஒருத்தருக்கு நான்கு முறைகள் இக்காய்ச்சல் வரக்கூடும். இதனால் டெங்கு காய்ச்சலுக்கான தடுப்பூசி முறை இன்னமும் ஆய்வில் உள்ளது. தடுப்பூசி இல்லாத காரணத்தால் டெங்கு நோயைப் பரப்பும் கொசுவில் இருந்து பாதுகாத்துக் கொள்வதே இன்றியமையாத தடுப்பு முறையாகும்.

கொசு (ஏடிசு) உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்தல், அவற்றின் வதிவிடத்தை முற்றுமுழுதாக அழித்தல், வதிவிடத்தில் இனம் பெருகாது கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானது. சுற்றுப்புறத்தில் தேங்கு நீர்நிலைகளைக் கண்டறிந்து அவற்றை வெறுமைப் படுத்துதல் அல்லது நீர் தேங்கி உள்ள அத்தகைய இடங்களில் பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணி-களை இடல் போன்றன கொசுக்களின் பெருக்கத்தைத் தடுக்கின்றது. பூச்சிகொல்லி மருந்துகளால் மாந்தருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கருதுமிடத்து தேங்கிய நீர்நிலைகளை வெறுமைப் படுத்தும் முறையே சாலச சிறந்தது. தோலை மூடக்கூடிய உரிய ஆடைகள் அணிவது, தூங்கும்போது கொசுவலை உபயோகிப்பது, கொசுக்கடிக்கு எதிரான களிம்பு, கொசுவர்த்திச் சுருள் போன்ற கொசுவிரட்டிகள் பயன்படுத்தல் என்பன கொசு கடிக்காமல் பாதுகாத்துக்கொள்ள உதவும்.

# எட்டு சற்றுநிருபங்களை இரத்துச்செய்யுமாறு பல்கலைக்கழகப் போதனாசிரியர்கள் கேட்டனர்

"பல்கலைக்கழகத்தின் சுயாதீனத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கிய எட்டுச் சுற்று நிருபங்களை இரத்துச் செய்யுமாறு நாம் அரசாங்கத்துக்கு கூறியிருந்தோம். எமது தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்ட பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவற்றை இரத்துச் செய்யும் என நாம் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இன்னமும் அவ்வாறு செய்யப்படவில்லை" என்று பல்கலைக்கழகப் போதனாசிரியர் சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசியான கலாநிதி ரெறன்ஸ் மதுயுத் கூறினார்.

அரசாங்கம் சமர்ப்பித்த மூன்று ஆவணங்களின் அடிப்படையில் எமது நூறு நாள் வேலை நிறுத்தத்தை இடைநிறுத்தினோம். கல்வி தொடர்பான கொள்கை பற்றி அமைச்சரவைப் பத்திரம், சம்பள உயர்வு பற்றி வழங்கப்பட்ட உறுதி மொழி, அரசாங்கம் பல்கலைக்கழக போதனாசிரியர் சங்கமும் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம் ஆகிய மூன்று விடயங்களின் அடிப்படையிலேயே நாம் வேலை நிறுத்தத்தைக் கைவிடப்பட்டோம் என்றும் கலாநிதி ரெறன்ஸ் மதியுத் கூறினார்.

## கடமை தவறிய பொலிசார் இடைநிறுத்தம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்ற நிகழ்வில் பாதுகாப்பு வழங்குவதற்காக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் இருவர் தங்களின் கடமையை அலட்சியம் செய்தமைக்காக அவ்விருவரும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு - 07 இலுள்ள 120 வருடங்கள் பழமை வாய்ந்த குதிரைப் பந்தயத்திடல் பார்வையாளர் கூடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறக்கப்பட்ட தினத்தன்று பாதுகாப்பு கடமையில் சரியாக ஈடுபடாத இரு பொலிஸ் உத்தியோகத்தர்களே நேற்றுமுன்தினம் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது மோட்டார் சைக்கிள் ஒன்று மேடைக்கு அருகில் சென்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது, போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த மோட்டார் பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் இருந்துள்ளனர். இதனால் கடமையில் அலட்சியம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் இருவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

## சங்கிலியை திருடும்போது கைதான சிறைக் கைதி

சிறையிலிருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர் ஒருவர் அரலகங்வில பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேக நபர் கடந்த ஜூன் மாதம் 8ஆம் திகதி பொலனறுவை பிரதேசத்தில் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரலகங்வில பொலிஸாருக்குக் கிடைத்த தகலுக்கு அமைய நடத்தப்பட்ட தேடுதலில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

## அரசின் கபட நாடகத்திற்கு தமிழ் மக்கள் ஒருபோதும் பலியாக மாட்டார்கள்

**சுமந்திரன் எம்.பி.**

ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களை உதாசீனம் செய்துவிட்டு, தமிழ் மக்களிடையே தலைவரொருவரைப் பலவந்தமாகத் திணிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அரசின் இந்தக் கபட நாடகம் பலிக்காது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்காத இந்த அரசு அவர்களிடம் தோல்வியையே தழுவியுள்ளது. சிங்கள, பௌத்த மக்களிடம் மட்டுமே வெற்றிபெற்ற இந்த அரசு அதனை அறியாதது போல் செயற்படுகிறது. ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களை உதாசீனம் செய்துவிட்டு, தமிழ் மக்களிடையே தலைவரொருவரைத் திணிக்க அரசு முயற்சிக்கின்றது. அதுவே அரசின் இன்றைய தேவைப்பாடாகவும் இருக்கின்றது.

எது எப்படியிருப்பினும் அரசின் இந்தக் கபட நாடகத்திற்கு தமிழ் மக்கள் ஒருபோதும் பலியாக மாட்டார்கள். அரசின் நாடகம் எம்மிடம் எடுபடாது என்று இந்த அரசுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்திற்குமே தமிழ் மக்கள் எடுத்துக் கூறுவர் என்றார் சுமந்திரன் எம்.பி.

## அதிர்ஷ்டவசமாக 150 இலங்கை பயணிகள் உயிர் தப்பினார்கள்

சென்னை விமான நிலையத்திலிருந்து இலங்கைக்குப் புறப்படவிருந்த விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதை விமானி உரிய நேரத்தில் கண்டுபிடித்ததால் 150 பயணிகள் உயிர் தப்பினர்.

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு நேற்று மாலை 3.40 மணிக்கு விமானம் புறப்பட்டுச் செல்ல இருந்தது. இதில் மொத்தம் 150 பேர் பயணம் செய்ய இருந்தனர். பயணிகள் அனைவரும் அனைத்து சோதனைகளையும் முடித்துக் கொண்டு விமானத்தில் ஏறி அமர்ந்தனர்.

விமானம் புறப்பட தயாரான போது, விமானி கடைசியாக விமானத்தை பரிசோதனை செய்தார். அப்போது விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு இருப்பதை கண்டுபிடித்தார்.

உடனடியாக இதுபற்றி விமான நிலைய அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரையும் கீழே இறக்கி பாதுகாப்புப் பகுதியில் தங்க வைக்கப்பட்டனர்.

விமானத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு சரி செய்யப்பட்ட பிறகு விமானம் தாமதமாக இலங்கைக்குப் புறப்பட்டுச் செல்லும் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

விமானி உரிய நேரத்தில் கோளாறைக் கண்டுபிடித்து விட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இதனால் 150 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

## மாவீரர் நாள் உரை நிகழ்த்த வைகோ அடுத்த மாதம் லண்டன் பயணம்

புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின், பிறந்த நாளையொட்டி வரும் நவம்பர் மாதம் லண்டனில் நடக்கவுள்ள புலிகள் ஆதரவாளர் கூட்டத்தில் பங்கேற்க ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ செல்கிறார்.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், இறுதிப் போர் நடைபெற்ற காலப்பகுதிக்கு முன்னர், ஒவ்வொரு ஆண்டும், தன் பிறந்த நாளன்று, தொலைக்காட்சியில் தோன்றி, "மாவீரர் நாள் உரை" நிகழ்த்துவார்.

கடந்த, 2009ஆம் ஆண்டு, இலங்கை இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் நடந்த போரில், பிரபாகரன் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்துக்கு பிறகு, லண்டனில் உள்ள இலங்கை தமிழர்கள், அவரது பிறந்த தினம் அன்று, முக்கிய தலைவர்களை அழைத்து, மாவீரர் நாள் உரை நிகழ்த்தும் நிகழ்ச்சியை, நடத்தி வருகின்றனர்.

பிரபாகரனின் பிறந்த நாள், அடுத்த மாதம், 26ம் தேதி வருகிறது. அன்று அல்லது மறு நாள், லண்டனில், இலங்கை தமிழ் சங்கத்தின் சார்பில், மாவீரர் நாள் உரை நிகழ்த்துவதற்கு, தமிழகத்திலிருந்து, இரு தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர், வைகோ எனக் கூறப்படுகிறது. இதற்காக, நீதிமன்ற உத்தரவின் மூலம், ஏற்கனவே தனது பாஸ்போட்டை பெற்றுள்ளார்.

எனவே, அடுத்த மாதம், 26ஆம் திகதி, லண்டன் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, வை.கோபாலசாமி லண்டன் செல்வார் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கூடங்குளம் அணுமின் நிலையத்தால் ஆபத்து

இந்தியாவின் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தால் வட மாகாணம் உள்ளிட்ட இலங்கையின் 15 இலட்சம் மக்களுக்கு உயிராபத்து ஏற்பட்டுள்ளதென மக்கள் போராட்ட இயக்கம் அச்சம் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய மக்கள் போராட்ட இயக்கத்தின் அரசியல் விவகார செயலாளர் புபுது ஜயகொட இவ்வாறு அச்சம் வெளியிட்டார்.

அணுமின் நிலையத்தால் பாதிப்பு ஏற்பட்டால் நட்டஈடு பெற அரசு இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகவும் அணுமின் நிலையம் வெடித்தால் மில்லியன் கணக்கான மக்கள் உயிரிழப்பர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் அணுமின் நிலைய தொழிநுட்பவியலாளர்கள் மற்றும் அது அமைக்கப்பட்டுள்ள இடம் குறித்து பிரச்சினை ஏற்பட்டுள்ளதென அவர் மேலும் கூறினார்.

## சர்வதேசப் பாடசாலைகளில் துஷ்பிரயோகங்கள் அதிகம்

**சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கண்டனம்**



'சர்வதேசப் பாடசாலைகளில் உள்ள நிர்வாகிகளின் அசட்டையீனம் காரணமாக சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பெருமளவில் இடம்பெறுவதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன" என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

எனவே சர்வதேசப் பாடசாலைகளை ஓர் ஒழுங்கமைப்பிற்குள் கொண்டுவருமாறு கல்வியமைச்சை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோரியுள்ளது.

"சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களே வாய் மூலமாக, உணர்வு பூர்வமாக, உடல் ரீதியாக பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திஸாநாயக்கா தெரிவித்தார்.

சர்வதேசப் பாடசாலைகரள நிறுவுவது அல்லது அவற்றை நடத்திச் செல்வது தொடர்பான சரியான ஒழுங்கு விதிகள் இல்லாமையே துஷ்பிரயோகம் நடப்பதற்குக் காரணம் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவியான அனோமா திஸாநாயக்கா தெரிவித்தார்.

இப்போது நாட்டிலுள்ள சர்வதேசப் பாடசாலைகளை கட்டுப்படுத்துவதற்கு காத்திரமான சட்டதிட்டங்கள் எதுவும் இல்லை. பணவசதி உள்ள எவரும் சர்வதேசப் பாடசாலைகளை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலைகளே இன்று இருக்கின்றன. இதன் விளைவாக சிறுவர்களுக்கு உகந்த சூழலும் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் பெரும்பாலான சர்வதேசப் பாடசாலைகளில் இல்லை என்றும் அனோமா திஸாநாயக்கா மேலும் கூறினார்.



உலக அழகிப் போட்டியில் கலந்து கொண்ட இலங்கையைச் சேர்ந்த மதுசா மாயாதுன்ன மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

ஜப்பானின் ஒக்கினாவாவில் நடைபெற்ற 54ஆவது உலக அழகிப் போட்டியில், இந்த முறை ஜப்பானிய அழகிக்கு முதலாம் இடம் வழங்கப்பட்டுள்ளது. பின்லாந்தின் அழகி இரண்டாம் இடம்பெற்றார்.

உலக நட்புக்கான அழகியாக மொரிசியஸ் தீவைச் சேர்ந்த அழகி தெரிவு செய்யப்பட்டார்.




01. விபத்தில் காயம்பட்டவரை அவசரத்தில் கண்டபடி தூக்கிச் செல்லக் கூடாது. படுக்க வைத்து மட்டுமே தூக்கிச் செல்ல வேண்டும். ஒருவேளை தண்டுவடம் பாதிக்கப்படாமல் இருந்து, நீங்கள் உடலை மடக்கித் தூக்குவதன் மூலம் அது பாதிப்படையலாம். உடல் பாகங்கள் செயல் இழந்து, நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும்.

02. எலும்பு முறிவு ஏற்பட்டால், எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்காமல் குத்துமதிப்பாகக் கட்டுப்போட்டுக் கொள்ளாதீர்கள். ஏனென்றால், எலும்புகள் கோணல்மாணலாக சேர்ந்துகொள்ளவும், தசைகள் தாறுமாறாக ஒட்டிக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. இதனால்... கால்கள் கோணலாக, குட்டையாக மாறக்கூடிய ஆபத்து இருக்கிறது.

03. பிஸியோதெரபி என்பது இயற்கை வலி நிவாரணி. மாதக் கணக்கில் வலி நிவாரணி மாத்திரைகள் சாப்பிடுவதன் மூலம் குணமாகும் பிரச்சினையை, வாரக் கணக்கிலேயே குணமாக்கிவிடும்.

04. எலும்பு உறுதிக்கு கல்சியத்தைவிட, புரொட்டீன்ஸ் மிக முக்கியம். கல்சியம். பருப்பு வகை, சோயா, காளான், முட்டை, இறைச்சி போன்றவற்றில் புரொட்டீன்ஸ் அதிகமாக உள்ளது.

05. எடை குறைவான இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவோர், மிக மெதுவாக செல்ல வேண்டும். வேகமாக செல்லும் போது ஏற்படும் அதிர்வுகள் நேர டியாக முதுகு, கழுத்து மற்றும் இடுப்புப் பகுதியைப் பாதிக்கும்.

06. எலும்புகள், 25 வயது வரை தான் பலம் பெறும். அதன் பிறகு மெல்ல வலுவிழக்க ஆரம்பிக்கும். எனவே, குழந்தைப் பருவத்திலிருந்து 25 வயது வரை சாப்பிடும் சத்தான உணவுகள்தான் எலும்பை உறுதிப்படுத்தும். அதன் பிறகு சாப்பிடுவதெல்லாம் எலும்புகளின் வலு குறையும் வேகத்தை குறைக்க மட்டுமே உதவும்.

07. வயதான காலத்தில் தடுமாறி விழுந்தால் முதுகு எலும்பு, இடுப்பு எலும்பு உடைந்து போக வாய்ப்பு அதிகம். வயதானவர்கள் நடமாடும் பகுதிகளில் தரை வழவழப்பாக இருக்கக் கூடாது. நல்ல வெளிச்சத்தோடு இருக்க வேண்டும். கார்ப்பெட்டில் கூட தடுக்கி விழலாம். எனவே, அவர்கள் எதையாவது பிடித்தபடி நடப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

08. கால் தடுமாறி பிசகி விட்டால்... உடனே "கையால் நீவிவிடு" என்பார்கள். அது தவறு. ஒரு வேளை, எலும்பில் நூலிழை தெறிப்பு இருந்தால், நீவிவிடுவ தன் மூலம் அந்தத் தெறிப்பு அதிகரிக்கலாம்.

09. குதிகால் வலி, கீழ் முதுகு வலி, கழுத்துவலி போன்றவை வந்தால் உடனே டாக்டரைப் பார்க்க ஓடாதீர்கள்... நாற்காலியும் செருப்பும்கூட காரணமாக இருக்கலாம். அணிந்திருப்பது தரமான செருப்புதானா... நாற்காலியில் முதுகு நன்றாகப் படியும்படி அமர்கிறோமா... என்பதை-யெல்லாம் கவனியுங்கள். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை, ஐந்து நிமிடம் சாய்ந்து அமர்ந்து "ரிலாக்ஸ்" செய்துகொள்வதையும் வழக்கமாக்குங்கள். இவ்வளவுக்குப் பிறகும் தொல்லை இருந்தால், டாக்டரைப் பார்க்கலாம்.

10. தயிர் சாப்பிட்டால் குழந்தைகளுக்குச் சளி பிடிக்கும் என்பது தவறு. குழந்தைக்குத் தயிர் மிகவும் நல்ல உணவு. தயிரில் புரொபயோட்டிக் எனும் சத்து அதிகம். அது குடலுக்கு மிக நல்லது. குழந்தைக்கு அலர்ஜி வராமல் தடுக்கும்.

11. குழந்தைகள் உணவில் மாவுச் சத்துக்களே அதிகமிருப்பதால்... வாழைப்பழம் அவசியம் கொடுக்க வேண்டும். இது மலச் சிக்கலைப் போக்கும். வாழைப்பழம் சாப்பிட்டால் சளி பிடிக்கும் என்பது தவறு.

12. குழந்தைகள் குண்டாக இருக்க வேண்டும் என்று அளவுக்கு அதிகமாக உணவு கொடுத்து உடலை பருமனாக்காதீர்கள். 60 வயதில் வர வேண்டிய உயர் இரத்த அமுக்கம், நீரிழிவு போன்றவை 30 வயதிலேயே வந்துவிடும். குழந்தைகளை சீரான உடல்வாகுடன் வளர்க்கப் பாருங்கள்.

**உணவே மருந்து!**

13. நீங்கள், தினமும் ஐந்து விதமான பழங்களையும், சில காய்கறிகளையும் உணவாக எடுத்துக் கொள்பவரா..? ஆம் என்றால்... ஆரோக்கியமும் அழகும் எப்போதும் உங்க பக்கம்தான்!

14. தினமும் ஒரு டம்ளர் மாதுளை ஜூஸ் குடிப்பது... உடலில் ரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை என பல பிரச்னைகளுக்குத் தீர்வாக இருக்கும்.

15. மனநலக் கோளாறு மற்றும் மூளை நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்களின் தினசரி உணவில் தர்பூசணி துண்டுகள் அவசியம். மன அழுத்தம், பயம் போன்ற பாதிப்புகளை தகர்க்கும் விட்டமின் பி-6 பூசணியில் அதிகம்.

16. ஆப்பிள் தோலில் பெக்டின் என்ற வேதிப்பொருள் கணிசமாக இருப்பதால், தோலோடு சாப்பிட வேண்டும். பெக்டின் நம் உடலின் நச்சுக்களை நீக்குவதில் எக்ஸ்பர்ட்.

17. பூண்டு சாப்பிட்டீர்களென்றால்... உங்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாவதோடு, கேன்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.

18. சிவப்பணு உற்பத்திக்கு புடலங்காய், பீட்ரூட், முருங்கைக் கீரை, அவரை, பச்சைநிறக் காய்கள், உளுந்து, துவரை, கம்பு, சோளம், கேழ்வரகு, பசலைக் கீரை போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

19. பச்சைப் பயறு, மோர், உளுந்துவடை, பனங்கற்கண்டு, வெங்காயம், சுரைக்காய், நெல்லிக்காய், வெந்தயக்கீரை, மாதுளம் பழம், நாவற்பழம், கோவைக் காய், இளநீர் போன்றவை உடலின் அதிகப்படியான சூட்டைத் தணிக்கும்.

20. சுண்டைக்காயை உணவில் சேர்த்தால்... நாக்குப்பூச்சித் தொல்லை, வயிற்றுப்பூச்சித் தொல்லை தூர ஓடிவிடும்.

21. வெங்காயம், பூண்டு, சிறுகீரை, வேப்பிலை, மிளகு, மஞ்சள், சீரகம், கருப்பட்டி, வெல்லம், சுண்டைக்காய் வற்றல், செவ்விளநீர், அரைக்கீரை, எலுமிச்சை போன்றவை உடலில் உள்ள நச்சுத்தன்மை நீக்கும் உணவுகள்.

22. சமையலுக்குக் கைக்குதல் அரிசியைப் பயன்படுத்துவது மிக மிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச் சத்துக்கள் நிறைந்துள்ளன.

23. சைக்கிள் கேப்பில் எல்லாம் ஸ்நாக்ஸ் சாப்பிடுவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக தானியங்கள், முளைகட்டிய பயறு போன்றவற்றைச் சாப்பிடலாம்.

24. பப்பாளிப் பழங்கள் மிகவும் சத்து மிகுந்தவை. வாரம் ஒருமுறை பப்பாளிப் பழம் வாங்கிச் சாப்பிடுங்கள். கண்களுக்கும் நல்லது.

25. அதிக நாட்கள் உணவை ஃப்ரிட்ஜில் வைத்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வைக்கப்பட்ட உணவுகளில் சத்துக்கள் குறைந்து விடுவதோடு, உடல் ஆரோக்கியத்துக்கும் தீங்கினை ஏற்படுத்தும்.

26. தினசரி சிறு துண்டு பைனாப்பிளை தேனில் ஊற வைத்து, அந்தத் தேனை இரண்டு வாரம் சாப்பிட்டால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும்.

27. பலமான விருந்து காரணமாக ஜீரணக் கோளாறா? புதினா, தேன், எலுமிச்சைச் சாறு... இவற்றில் ஒவ்வொரு ஸ்பூன் கலந்து சாப்பிட்டால் போதும். கல்லும் கரைந்துவிடும்.

28. கேன்சர் செல்களைத் தகர்க்கும் சக்தி திராட்சையின் தோலில் இருக்கிறது. திராட்சை கொட்டைகளிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்கள், வைரஸ் எதிர்ப்புச் சக்தியை பெரிதும் தூண்டுகின்றன.

**மருந்தே வேண்டாம்!**

29. இயற்கைச் சூழலான இடங்களுக்குச் செல்ல நேர்ந்தால்... கொஞ்ச நேரம் ஆழமாக மூச்சு விடுங்கள். நுரையீரலுக்கு அது மிகவும் பயனளிக்கும்.

30. எந்தவித நோய் தாக்கியிருந்தாலும் முதலில் செய்ய வேண்டியது, கவலையைத் தூக்கி எறிவதுதான். அதுதான் முதலுதவிக்கும் முந்தைய சிகிச்சை.

31. சர்க்கரையை (சீனி) உங்கள் வாழ்க்கையிலிருந்து ஒழிக்க முடிந்தால், உடலின் எதிர்ப்புச் சக்தியை எளிதில் வலுப்படுத்தலாம்.

32. உடம்பைக் குறைக்க ஒரே வழி உணவுக் கட்டுப்பாடும், நடைபயிற்சியும்தான். காந்தப் படுக்கை, பெல்ட், மாத்திரை போன்றவை உரிய பலனைத் தராது.

33. பீட்டா காரோட்டீன்ஸ் அதிகமுள்ள உணவுகளை உண்பது இதயத்துக்கு நல்லது. குறிப்பாக கேரட், முட்டைகோஸ், சர்க்கரைவள்ளிக் கிழங்கு, அடர் பச்சை நிற கீரைகள் போன்றவை.

34. நீங்கள் அடிக்கடி நீச்சல் அடிப்பவர் என்றால்... இதயத்தைப் பற்றி கவலையேபடத் தேவையில்லை.

35. உப்பு, இதயத்துக்கு எதிரானது. உப்பு போட்ட கடலை-யக் கொறிக்கும்போதெல்லாம், இதயம் பாதிக்கப்படுவதாக உணருங்கள்.

36. மன அழுத்தம் இதயத்தின் எதிரி. அதை விட்டுத் தள்ளுங்கள்.

37. உங்கள் குடும்பத்தில் யாருக்காவது இதய நோய்கள் இருந்தால், உங்கள் இதயத்தை மருத்துவர் மூலம் சோதிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

**கிட்னியைக் கவனியுங்கள்**

38. கிட்னியில் கல் இருக்கிறதா? சாப்பாட்டில் மெக்னீசியம் சேருங்கள். நிறைய பீன்ஸ் சாப்பிடாலே போதும்! கோதுமை, ஓட்ஸ், பாதாம், முந்திரி, மீன், பார்லி போன்றவையெல்லாம் மெக்னீசியம் அதிகம் உள்ள சில உணவுகள்.

39. சிப்ஸ், கோக், இனிப்புள்ள பாட்டில் ஜூஸ்கள், சீனி - இவையெல்லாம் கிட்னியில் கல்லை உருவாக்கும் வில்லன்கள்... உஷார்!

40. நிறைய தண்ணீர் குடிப்பது, சிறுசிறு கிட்னி கற்களை அகற்ற உதவும். கூடவே கேரட், திராட்சை மற்றும் ஆரஞ்சு ஜூஸ் என்று ஏதாவது ஒன்றைக் குடிப்பது மிகவும் நல்லது.

41. காய்கறிகளை நிறைய சாப்பிடுபவர்களுக்கு, "கிட்னியில் கல்" என்ற பயமே தேவையில்லை.

**பல்லுக்கு உறுதி!**

42. பல்லில் வலி, ஈறுகளில் வீக்கம், வாயின் வெளிப்புறத்தில் வீக்கம், பல் கறுப்பு நிறமாக மாறுவது, பல்லில் குழி ஏற்பட்டு உணவு தங்குவது, குளிர்ந்த மற்றும் சூடான உணவு உட்கொள்ளும்போது கூச்சம் ஏற்படுவது போன்றவை பல் சொத்தை ஏற்படுவதற்கான அறிகுறிகள்.

43. பற்களில் ஏற்படும் பாதிப்பு, தொண்டைக்குப் பரவி, சமயங்களில் இதயத்தையும் பாதிக்கும். எனவே, பற்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

44. தேநீர், காபி போன்றவற்றை அடிக்கடி குடிப்பது பற்களுக்கு நீங்களே வேட்டு வைப்பதற்குச் சமம். மிகவும் குளிர்ந்த நீரைக் குடிப்பதைத் தவிருங்கள்.

45. சூடான உணவை சாப்பிட்ட நொடியே, ஜில்லான உணவுக்கு மாறினால், உடலுக்கும் பல்லுக்கும் பாதிப்புகள் ஏற்படும்.

56. இனிப்புச் சாப்பிடுபவர்களுக்குப் பல் சொத்தை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே, எது சாப்பிட்டாலும் வாய் கொப்பளிக்க வேண்டும்.

57. அக்கி எனப்படும் முகத்தில் தோன்றும் கட்டிகளுக்கு மண் பூசும் வழக்கமிருக்கிறது. அக்கி, ஒருவித கிருமித் தொற்றுமூலம் ஏற்படக்கூடியது. அதற்கான மருந்துகளைப் பயன்படுத்துவதே நல்லது.

58. சருமத்தை இளமையாக, சுருக்கங்கள் இல்லாமல் வைத்திருக்க தண்ணீர் அதிகம் குடிப்பது முக்கியமானது. மன அழுத்தம், சோர்வு, இறுக்கமான ஆடை, மது, புகை, காபி... இவையெல்லாம் சருமத்தின் வில்லன்கள்.

59. தேவையற்ற அழுக்குகள் சருமங்களில் தங்கி, அதன் பொலிவையும், உயிர்ப்பையும் கெடுக்கின்றன.

எனவே, முகத்தை அடிக்கடி கழுவிச் சுத்தப்படுத்து வது அவசியமானது.

60. முகப்பரு இருந்தால்... உடனே கிள்ளி எறிய விரல்கள் படபடக்கும். ஆனால், அது ஆபத்தானது. முகத்தில் பள்ளங்களை நிரந்தரமாக்கிவிடும்.

61. நீரிழிவு பிரச்சினை உள்ளவர்கள் அனைத்து வகை கீரைகள், காய்கள், வாழைத்தண்டு சாப்பிடலாம். வெந்தயம் மிக நல்லது.

62. உப்பில் ஊறிய ஊறுகாய், கருவாடு, அப்பளம், வற்றல் கூடவே கூடாது. அசைவம் வாரத்தில் 100 கிராம் அளவில் சாப்பிடலாம். முட்டையில் வெள்ளைக் கரு மட்டும் ஓ.கே! உயர் ரத்த அழுத்த பிரச்னை உள்ளவர்களுக்கும் இது பொருந்தும்.

63. மா, பலா, வாழை, காய்ந்த திராட்சை, சப்போட்டா, பேரீச்சை ஆகியவற்றைத் தவிர்க்கலாம். பனை வெல்லம், பனங்கற்கண்டு, தேன், மலைவாழை, லேகியம், பஞ்சாமிர்தம் சேர்க்கவே கூடாது.

64. இரண்டு, மூன்று வெண்டைக் காய்களின் காம்பு மற்றும் அடிப்பகுதியை நீக்கி, நெடுக்குவாட்டில் கீறல்களை போட்டு விட்டு இரவு முழுக்க டம்ளர் நீரில் மூடி வைக்க வேண்டும். காலை உணவுக்கு முன் இந்த நீரை மட்டும் அருந்திவர, இரண்டே வாரத்தில் சர்க்கரை குறையும். இது மேற்கத்திய நாடுகளின் எளிய வைத்தியம்


65. உடல் எடையைக் குறைக்கிறேன் பேர்வழி என சாப்பாட்டின் அளவை திடீரென குறைப்பது ஆபத்து. உடலில் சீனியின் அளவு வேறுபட்டு, நீரிழிவு நோய் வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

66. நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், புற்றுநோய், எய்ட்ஸ் ஆகிய நோய்களால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கும், ஸ்டீராய்டு மாத்திரை சாப்பிடுபவர்களுக்கும் உடலில் எதிர்ப்புச் சக்தி குறைந்து இருக்கும். இவர்களை எளிதில் நோய் தாக்கும். எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

ஆரோக்கிய நாதம்

உள்ளே யந்திரங்கள் பொருத்த வேண்டியதுதான் பாக்கி. விம்பர் அந்த யந்திரங்கள் வாங்குவதற்குப் பேரம் செய்து கொண்டிருந்தான். கட்டிட அனுபவமில்லாததையும் பொருட்படுத்தாமல், மிகவும் எளிய ஆயுதங்களை மட்டும் உபயோகித்து ஸ்நோபாலின் எதிர்ப்பு யுக்திகள் எல்லாவற்றையும் மீறி விலங்குகள் பெரியதொரு சாதனையைச் சாதித்துவிட்டன. திட்டமிட்டபடி முடித்தும் விட்டன.

தங்களுடைய மஹோன்னதமான சிரு'டியாகிய அந்தக் கட்டிடத்தைச் சுற்றி சுற்றி வந்து விலங்குகள் குதித்தன. முதல் தடவை நிர்மாணித்திருந்ததைவிட இப்போது கட்டிடம் அதிக அழகாக இருந்ததாக அவற்றிற்குத் தோன்றியது. தவிரவும் கட்டிடச் சுவர் முன்னிருந்ததைவிட இரண்டு மடங்கு கனம் இருந்தன. வெடிமருந்து வைத்துக் கிளப்பினால் ஒழிய, கட்டிடத்தை யாரும் எதுவும் அசைக்க முடியாது. எப்படித்தான் உழைத்துப் பாடுபட்டார்களே? எத்தனை எதிர்ப்புகளையும் அவநம்பிக்கைகளையும் அவை சமாளிக்க வேண்டியதாக இருந்தது!




காற்றாடி யந்திரம் சுழல ஆரம்பித்தபின், விலங்குகள் வாழ்க்கை முந்திய வாழ்க்கையை விட எவ்வளவு மேன்மையானதாக இருக்கும்! இவற்றையெல்லாம் பற்றி எண்ணிப் பார்க்கும்போது, அலுப்பு, களைப்பு எல்லாம் பறந்தோடிவிட்டன. உற்சாகமாகக் கைகோர்த்துக்கொண்டு அவை காற்றாடி யந்திரக் கட்டிடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தன, ஆரவாரித்தன, வெற்றி முழக்கங்கள் பல செய்தன. நெப்போலியனே நேரில் அங்கு வந்து நின்றது.

சேவல் முன் சென்று கட்டியம் கூற, நாய்கள் பின் தொடர்ந்து காவல் காக்க, நெப்போலியன் அங்கு வந்து முடிந்துவிட்ட கட்டிடத்தைப் பார்வையிட்டது. மிருகங்களைப் பாராட்டியது. காற்றாடி யந்திரத் துக்கு "நெப்போலியன் காற்றாடி' என்று பெயர் வைத்துவிடலாம் என்று சொல்லிற்று.

இரண்டு நாட் களுக்குப் பிறகு ஒரு சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. நெப்போலியன் கூறிய செய்தியைக் கேட்டு அவை ஆச்சரியத்தால் வாயடைத்துப் போயின.


மரக்கட்டைகளை ஃப்ரடெரிக்குக்கு விற்றுவிட்டதாக அறிவித்தது நெப்போலியன்.


மறுநாள் ஃப்ரடெரிக்கின் வண்டிகள் வந்து அந்த மரக்கட்டைகளை எடுத்துப் போகும். பில்கிங்டனிடம் சிநேகமாக இருப்பதுபோல இருந்த நாட்களிலும்கூட, உண்மையில் ஃப்ரடெரிக்கிடந்தான் ரகசியமாக நட்புடன் இருந்ததாகச் சொல்லிக்கொண்டது நெப்போலியன்.

பாக்ஸ்வுட்டுடன் இருந்து வந்த எல்லாத் தொடர்புகளும் இப்போது ரத்தாயின. பில்கிங்டனை அவமதிக்கும்படி தூது அனுப்பப்பட்டது.

புறாக்கள் இனி பிஞ்ச்பீல்டு பண்ணைப் பக்கம் போகக்கூடாது என்ற உத்தரவிடப்பட்டது. ஷஃப்ரடெரிக் சா.கட்டும்' என்கிற ஸ்லோகம் இப்போது "பில்கிங்டன் சாகட்டும்' என்று மாற்றப்பட்டது.


(நாளை)






தேவை:
[illegible]

செய்முறை:
★மெழுகுவத்திக் கிண்ணத்தை எடுத்து. படத்தில் காட்டியது போல, கத்தரிக்கோலால் வெட்டிக்கொள்.
★வெட்டிவிட்ட எல்லா பிளேடுகளையும் ஒரே வட்டத்தில் லேசாக முறுக்கியபடி மடி.
★கிண்ணத்தின் மத்தியில் துளை ஒன்றைப் போடு.
★ஸ்ட்ராவில் ஒரு குச்சியை நுழைத்து. அதை அப்படியே கிண்ணத்தின் மத்தியில் இருக்கும் துளையில் செருகு. ஃபேன் தயார்.
★முன்னும் பின்னும் வேகமாக அசைத்தால் ஃபேன் சுழலும்.








## தகவல்கள்

01.மின்னாற் பகுப்பு விதி முறைகளைக் கண்டறிந்தவர் யார்? **மைக்கேல் பாரடே**

02.மூட்டு என்றால் என்ன?
**மனித உடலில் இரண்டும் அதற்கும் மேற்பட்ட எலும்புகள் ஒன்றாக இணைந்திருப்பது மூட்டு ஆகும்.**



03.இரும்பின் வகைகளைக் கூறு?
**இரும்பை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.**
**அவையாவன 1. தேனிரும்பு 2. வார்ப்பிரும்பு, 3. எஃகு இரும்பு.**

## ஸ்ப்ரிங் பூச்சி!

தேவை:
[illegible]

செய்முறை:
★பந்தின் மேல் புறத்தில் தேவையான டிசைனை வரைந்துகொள்.
★மெல்லிய கம்பிகளை படத்தில் காட்டியதுபோல பந்தின் விளிம்பில் 'X' போல செருகி. அதன் முனைகளை வளைத்துக்கொள்.
★இந்த இரண்டு கம்பிகளும் தொட்டுக்கொண்டு இருக்கும் இடத்தை ரப்பர் பேண்டால் இறுக்கமாகக் கட்டு.
★ஸ்ட்ராவைக் கைகளாக வைத்து. பந்துக்குள் செருகு.
★ஸ்ப்ரிங் பூச்சி ரெடி.
★பந்தினை லேசாக அழுத்திவிட்டுப் பார்... அது தானாக மேல் எழுந்து. சற்று நேரத்திற்கு ஆடியபடி. பார்க்க பூச்சி மாதிரியே எஃபெக்ட்டைக் கொடுக்கும்.

# சிறுவர் அமுதம்

## புதிர்



பாலு ஓர் இனிப்புக் கடைக்குச் சென்று ரூபாய் நூறு மதிப்பிலான மூன்று விதமான இனிப்புகள் வாங்கினான். அந்த இனிப்புகள் முறையே போளி, மைசூர்பாகு, ரசகுல்லா. ஒவ்வொரு இனிப்பு வகையிலும் குறைந்த் பட்சம் ஒன்றாவது வாங்கினான். ஒரு போளியின் விலை 50 சதம். ஒரு மைசூர்பாகு ரூபாய் மூன்று. ஒரு ரசகுல்லா விலை ரூபாய் பத்து.மூன்று வகையான இனிப்புகளும் சேர்த்து நூறு இனிப்புகள் இருந்தன.

**கேள்வி இதுதான்:**

நூறு இனிப்புகளில் எத்தனை போளி, எத்தனை மைசூர்பாகு மற்றும் எத்தனை ரசகுல்லாக்கள் இருந்தன?


**5 ரசகுல்லா (10 ரூபாய்) = 50, 94 போளி (50 சதம்) = 47**
**1 மைசூர்பாகு (3 ரூபாய்) = 3**

**கண்ணாடி**

மிகப் பரவலாக உபயோகிக்கப்படும் பொருள் கண்ணாடி. மணல், சோடா, சுண்ணாம்பு போன்ற எளிய பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பல உருவங்களில் செய்வது சுலபம். மயிரை விட லேசான இழையாகவும் நூற்க முடியும். பல டன் எடையுள்ள கட்டியாகவும் வார்க்கலாம். எல்லா கால நிலையையும் தாங்கக் கூடியது. பெரும்பாலான இரசாயனங்களால் பாதிக்கப்படாதது. உண்மையில் கண்ணாடி ஒரு திடப் பொருளல்ல., கனத்த திரவமே கண்ணாடி.

**செலுலாயிட்**

பரவலாக உபயோகப்படுத்தப்பட்ட முதல் செலூலாயிட் இதுதான். செலுலோஸ் நைட்ரேட் எனப்படும் இது. எளிதில் எரியக்கூடியது. 1869இல் ஜான் வெஸ்லி ஹயாத் என்பவர் இதைக் கண்டுபிடித்தார். பருத்திக்கொட்டை சக்கையை நைட்ரிக், சல்பூரிக் அமிலம் கலவையில் சேர்த்துக் செய்கிறார்கள். சுத்தமான செலுலாயிட் நைட்ரேட் எளிதில் உடையக்கூடியது. எனவே, கற்பூரத்தை சோத்து வளைக்கவும், வார்க்கவும் எளிதாக செய்கிறார்கள். பிளாஸ்டிக்குகள் வந்த பின்னர் இதன் உபயோகம் மிகவும் குறைந்துவிட்டது. இப்போது மூக்குக் கண்ணாடி பிரேம்கள், டேபிள் ரெனிஸ் பந்துகள் போன்ற சில பொருட்களே இதனால் செய்யப்படுகின்றன.



**சுடோக்கு எண் 78 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 5 | 6 | 9 | 1 | 4 | 8 |
| 4 | 6 | 5 | 1 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 8 | 1 | 9 | 4 | 7 | 2 | 6 | 3 | 5 |
| 6 | 3 | 8 | 7 | 9 | 4 | 5 | 1 | 2 |
| 5 | 2 | 1 | 8 | 3 | 6 | 4 | 9 | 7 |
| 9 | 4 | 7 | 2 | 5 | 1 | 3 | 8 | 6 |
| 2 | 5 | 3 | 9 | 1 | 7 | 8 | 6 | 4 |
| 7 | 9 | 6 | 3 | 4 | 8 | 2 | 5 | 1 |
| 1 | 8 | 4 | 6 | 2 | 5 | 9 | 7 | 3 |

**சுடோக்கு எண் 79**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | 5 | | | 7 | |
| | | 3 | 2 | | | | 1 | |
| | | | | | 4 | | | 2 |
| 2 | 6 | | | 7 | | | | 8 |
| | | | 5 | | 8 | | | |
| 7 | | | | 3 | | | 2 | 9 |
| 3 | | | 8 | | | | | |
| | 5 | | | | 2 | 6 | | |
| | 1 | | | 4 | | 5 | | |



# இன்று சரஸ்வதி பூசை

# பெருவிழா காணும் கலைமகள்

உலக இயக்கத்திற்கு ஆதாரமாக அமைந்திருப்பது சக்தி.அந்த சக்தியைத் தருபவளாகத் திகழ்பவள் அன்னை ஆதிபராசக்தி. அவளே, தன் அம்சமாக முப்பெரும் சக்தியைத் தோற்றுவித்து, பிரபஞ்ச இயக்கம் சிறப்புற நிகழும் வகையில் திருவருள் பாலிக்கின்றாள்.

இந்த சக்திக்குரியவர்களாக விளங்கும் துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியர்களை இந்து மக்கள் போற்றி வழிபடுகின்ற ஒரு விழாவாகவும், மனித குலத்திற்கு சிறப்பையும், வெற்றியையும் சகல செல்வங்களையும் அருளும் பண்டிகையாகவும் மட்டுமன்றி, உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் விரதகாலமாகவும் நவராத்திரி அமைந்துள்ளது.

தேக ஆரோக்கியம் எனும் உடல் வலிமை, ஐஸ்வரியம் எனும் பொருட்செல்வம், அறிவாற்றலைத் தரவல்ல கல்விஞானம் என்பவற்றை வேண்டிச் செய்யும் வழிபாட்டுத் தத்துவத்தை நவராத்திரி வெளிப்படுத்துகின்றது. வீரம், செல்வம், கல்வி என்று சொல்லப்படும் மூன்றும் மனித வாழ்க்கைக்கு முக்கியமானவையாகும். வாழ்க்கையில் இம் மூன்றின் சிறப்புக்களையும் அடைவது அவசியமானது மட்டுமன்றி, இதன் ஒன்றிணைந்த வளர்ச்சி மனிதனில் நிகழும்போதுதான் அவன் ஆளுமையும் பூரணத்துவமும் நிறைந்தவனாகிறான். இத்தகையதொரு தனித்துவ சிறப்புக்குரியதாக நவராத்திரி அமைந்துள்ளது.

வாழ்க்கை சிறப்பானதாகவும், பலருக்கும் பயன்படும் வகையிலும், பலரும் போற்றும் படியாகவும் அமைய வேண்டுமானால் நமது செயல்கள் நல்லனவாக இருத்தல் வேண்டும். செயல்கள் நல்லனவாக அமைவதற்கு சிந்தனைத் தெளிவு ஏற்பட வேண்டும். அத்தகைய சிந்தனைத் தெளிவானது நமக்கு கிடைப்பதற்கு நல்லறிவினைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய நல்லறிவை நமக்கெல்லாம் அருளும் வகையில் ஞானசக்தியாகிய சரஸ்வதி தேவி விளங்குகிறார். கல்வித் தெய்வமாக, சகல கலைகளுக்கும் அதிபதியாகப் போற்றப்படுவதால் அவர் கலைமகளாகவும் சிறப்புப்பெறுகின்றார். நவராத்திரியின் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதி தேவியின் வழிபாட்டுக்குரியதாக அமைந்துள்ளது.

வெண்ணிற உடையுடனும் கையில் வீணையுடனும், வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதிதேவியை "ஆல கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை" என்றும் வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்" என்றும் புலவர்கள் சிறப்பித்து பாமாலை சூட்டியிருக்கின்றார்கள்.

பாரதியார் சரஸ்வதிதேவியைப் போற்றிப் பாடியுள்ள துதிப்பாடலில்,

**"வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்**
**வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்**
**கொள்ளை இன்பம் குலவு கவிதை**
**கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்**
**உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே**
**ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்**
**கள்ளமற்ற முனிவர்கள் கூறும்**
**கருணை வாசகத் துட்பொரு ளாவாள்;;**
**என்று சிறப்பாகச் சொல்லுகின்றார்.**

சரஸ்வதிதேவியை சகல கலைகளுக்கும் அதிபதியாகப் போற்றி வணங்கும் குமரகுருபர சுவாமிகள் அருளிய "சகலகலாவல்லி மாலை" எனும் பாமாலையின் முதலாவது பாடலில்,

**"வெண்டா மாரைக்கன்றி நின்பதம்**
**தாங்கவென் வெள்ளை யுள்ளத்**
**தண்டா மரைக்குத் தகாது**
**கொலோ சகமேடு மளித்**
**துண்டா னுறங்க வொழித்தான்பித்**
**தாகவுண் டாக்கும் வண்ணம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே**
**சகல கலா வல்லியே**"- என மிகவும் சிறப்பாகத் துதிசெய்துள்ளமையை இங்கு குறிப்பிடலாம்.

நவராத்திரி காலத்தில் வீடுகளிலும், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், அலுவலங்கள் மற்றும் தொழிலகங்களிலும் ஒன்பது நாட்களும் நவராத்திரி விழாவை பூசை, வழிபாடுகளுடன் செய்ய முடியாதவர்கள் ஒன்பதாவது நாளன்று சரஸ்வதி பூசையை மட்டும் சிறப்பாகச் செய்வது வழக்கம். சரஸ்வதிதேவியின் திருவுருவப் படத்திற்கு மாலை சூட்டி அலங்கரிப்பது, பால், பழம், வெற்றிலை பாக்கு முதலான பூசைப் பொருட்களையும் வடை, கடலை, அவல் முதலான பலகார வகைகளையும் படைத்து புத்தகங்கள், இசைக் கருவிகள் போன்றவைகளையும் வைத்து, குடும்பத்தினருடன் ஒன்றிணைந்து தோத்திரப் பாடல்களையும் பாடி வழிபாடு செய்வார்கள். குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட குடும்பத்தினர் தங்கள் வீடுகளில் சரஸ்வதி பூசை வழிபாட்டை தவறாது செய்வது வழககமாகும்.

பத்தாவது நாளாகிய விஜயதசமியன்று வித்தியாரம்பம் செய்வது நீண்டகாலமாக நடைமுறையிலுள்ள வழக்கமாகும். பாடசாலைக்குச் சென்று கல்வியைத் தொடரவிருக்கும் சிறுபிள்ளைகளுக்கு அன்றைய தினம் நல்லறிஞர்களான பெரியவர்களால் உயிர் எழுத்துக்களை சொல்லிக்கொடுத்தும், பிள்ளைகளின் கைகளினால் எழுதுவித்தும் ஆரம்பிக்கும் ஒரு சம்பிரதாய நிகழ்வாக இது அமைந்துள்ளது. இதனை 'ஏடு தொடக்குதல்' என்றும் சொல்வதுண்டு. இதுவும் கலைமகளான சரஸ்வதிதேவியை போற்றித் துதித்து செய்யப்படும் கருமமாகவே அமைகிறது.

கலைமகளுக்குரிய இன்றைய பெருவிழா நாளில் கல்வித் தெய்வமான அவரைப் போற்றி வழிபட்டு, கல்வியில் தேர்ச்சியும், கலைகளில் வளர்ச்சியும், அறிவில் முதிர்ச்சியும் பெற்று வாழ்வோமாக!

- ***அ.கனகசூரியர்.***

## நவராத்திரி சிறப்பு மலர்



நவராத்திரியின் இறுதி மூன்று நாட்களும் கல்விச் செல்வத்தை வேண்டி கல்விக்கும், கலைகளுக்கும் அதிபதியான சரஸ்வதிதேவியை வழிபாடு செய்வது வழக்கம். அந்த வகையில் சரஸ்வதி தேவியின் வழிபாட்டுக்குரிய மூன்றாவது நாளாக இன்றைய தினம் சிறப்புப் பெறுகின்றது.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் கலைமகள், ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உயர்விக்கும் அம்மையாகப் போற்றித் துதிக்கப்படுகின்றார்.

### இன்பமே வடிவாகப் பெற்றவள்!

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசு மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியி னாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்!

வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழு மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்!

### நாற்கவி பாட நல்லருள் தருவாய்!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற் கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாச னத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே!

### வாக்கினில் வந்து அருள்வாயே!

அம்மா தாயே கலைவாணி
நீஎன் நாவைக் காப்பாயே
இம்மா நிலத்தின் இனிமையெல்லாம்
இருக்குதுன் நாவின் அசைவினிலே!
வெண்டாமரை மேல் வீற்றிருப்பாள்
வீணையை கையில் ஏற்றிருப்பாள்
வாணி சரஸ்வதி மாதாவே- எந்தன்
வாக்கினில் வந்து அருள்வாயே!

## நவராத்திரி விழாவில் இன்று

### நாவலர் மணி மண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் நவராத்திரி விழாவின் இறுதிநாளான இன்றைய நிகழ்வாக கும்ப பூசையைத் தொடர்ந்து, சைவப்புலவர் நித்திய தசிதரன் "மகிடாசுர மர்த்தனி திருவருள்" எனும் பொருளில் ஆற்றும் சிறப்புச் சொற்பொழிவும், நல்லூர் பிரதேசத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன.

மாலை 3.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இன்றைய நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இன்றைய நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். (க)

### சஹஜ யோகா நிலையத்தில்

யாழ்ப்பாணம் சஹஜ யோகா நிலையத்தினரின் நவராத்திரி விழாவில் இன்று ஸ்ரீதேவி பூசை இடம்பெறுகிறது.

யாழ் சஹஜ இல்லத்தில் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு விசேட இசை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நடைபெறும் (க).

# உலக பார்வை

# ஈரானுடன் பேச்சுவார்த்தையா? அமெரிக்கா மறுப்பு



அணு ஆயுத திட்டம் குறித்து ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாக அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் குற்றம் சுமத்தி வருவதுடன், பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்காவும், ஈரானும் கொள்கை அளவில் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இந்த ஒப்பந்தம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக்காலம் தொடங்கிய போது முதலில் நடத்தப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வரை பேச்சுவார்த்தையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஈரான் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பேச்சுவார்த்தை தொடர்பாக இரு தரப்பும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் நகல்கள், அமெரிக்கப் பிரதிநிதிகள் அடங்கிய சிறிய குழுவிடம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த செய்தியை அமெரிக்கா மறுத்துள்ளதுடன், அந்நாட்டின் தேசியப் பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் டாமி வீட்டர் கூறுகையில், ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு அமெரிக்காவும், ஈரானும் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டுள்ளதாகக் கூறப்படுவது உண்மையல்ல.

எனினும் ஈரானின் அணு ஆயுதத் திடடம் குறித்து அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒபாமா நிர்வாகம் தயாராகவே உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# எகிப்தில் பிரான்ஸ் பெண் பத்திரிகையாளர் மீது தாக்குதல்



எகிப்தில் பிரான்ஸ் பெண் பத்திரிக்கையாளரான சோனியா திரிதியை இளைஞர்கள் துன்புறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எகிப்தின் கெயரோ தாஹிர் சதுக்கத்தில் நடந்த போராட்டத்தை FRANCE-24 என்ற தொலைக்காட்சி நேரடியாக ஒளி பரப்பியது.


இத்தொலைக்காட்சியின் பத்திரிக்கையாளரான சோனியா திரிதயிடம் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தகாத முறையில் நடந்து கொண்டுள்ளனர்.

இதனையடுத்து அங்கிருந்த நபர்கள் சோனியாவை காப்பாற்றியதுடன், பொலிசில் புகார் அளித்துள்ளனர்.

தற்போது சோனியா எவ்வித அச்சுறுத்தலுமின்றி பாதுகாப்பாக இருப்பதாக FRANCE-24 தெரவித்துள்ளது.

இதே போன்று முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கை எதிர்த்து போராட்டங்கள் நடந்த போதும் பெண் பத்திரிக்கயாளர்கள் மீது தாக்குதல் நடந்தது குறிப்பிடத்தக்கது.

# பிடெல் காஸ்ட்ரோவுக்கு பக்கவாத நோயா? வதந்தி என்கிறார் சகோதரி



மரணத்தை ஏற்படுத்தும் பக்கவாத நோயால் பிடெல் காஸ்ட்ரோ பாதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாவது அப்பட்டமான வதந்தி என்று அவரது சகோதரி ஜுவனிதா காஸ்ட்ரோ கூறியுள்ளார்.

புரட்சியாளரும், கியூபாவின் முன்னாள் ஜனாதிபதியுமான பிடெல் காஸ்ட்ரோவிற்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதால் ஆட்சி பொறுப்பை சகோதரரிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வெடுத்து வருகிறார்.

இந்நிலையில் காஸ்ட்ரோ பக்கவாத நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக தன்னை சுற்றியுள்ளவர்களை அடையாளம் காண்பதற்கு சிரமப்படுவதாகவும், பேச முடியாத நிலையில் உள்ளதாகவும் அவரை கண்காணித்து வருகின்ற மருத்துவர் ஜோஸ் மார்க்குயினா கூறியுள்ளதாக செய்திகள் வெளி வந்துள்ளன.

இத்தகவலை காஸ்ட்ரோவின் சகோதரியும், அவருடைய மகனும் மறுத்துள்ளனர். வெனிசுலா நாட்டின் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள ஜுவனிதா காஸ்ட்ரோ, இது அப்பட்டமான வதந்தி என்று கூறியுள்ளார். இதேபோல காஸ்ட்ரோவின் மகனும், தனது தந்தை ஆரோக்கியத்துடன் இருப்பதாக கூறியுள்ளார்.

# மும்மர் கடாபியின் இளைய மகன் படுகொலை




லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி மும்மர் கடாஃபியின் இளைய மகன் (சனிக்கிழமை) திரிப்போலியில் நடைபெற்ற தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இத்தாக்குதலில் இவருடன் சேர்ந்து லிபிய தேசிய காங்கிரஸின் தலைவர் மொஹம்மட் மாக்ரிஃபும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரிப்போலியிலிருந்து 170 மு.அ தூரத்தில் அமைந்துள்ள “பானி வலிட்“ எனும் இடத்தில் கிளர்ச்சியாளர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றதில் லிபிய இராணுவததின் பிரிவான “காமிஸ் பிரிகேட்“ இல் தளபதியாகப் பணியாற்றிய காமிஸ் கடாஃபி படுகாயமடைந்தார்.

மேலும் இராணுவத்திடம் சிக்கிய பின்னரே உயிரிழந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் மும்மர் கடாஃபி கொல்லப்பட்டு சரியாக ஒரு வருடம் கழித்து நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



லக்சம்பர்க் இளவரசர் குய்லாமே மற்றும் இளவரசி ஸ்டிபானியின் திருமணம் லக்சம்பர்க் நகரில் நடைபெற்றது.

# அழகு நிலையத்தில் மர்ம மனிதன் துப்பாக்கிச் சூடு: 4 பேர் பலி



அமெரிக்காவில் பிரபல அழகு நிலையம் ஒன்றில் மர்ம மனிதன் திடீரென துப்பாக்கி சூடு நடத்தியதில் 4 பேர் பலியாகினர், 7 பேர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள மில்வாக்கி நகரில் புஷ்ருக்பீல்டு ஸ்கொயர் என்ற ஷாப்பிங் மால் உள்ளது.

இந்த மாலுக்கு புகுந்த மர்ம மனிதன் திடீரென துப்பாக்கி சூடு நடத்தியதில் 4 பேர் பலியாயினர், 7 பேர் காயமுற்றனர்.

துப்பாக்கி சூடு நடத்திய நபர் அந்த இடத்திலேயே இருப்பதாக தகவல் கிடைத்ததும், விரைந்த வந்த பொலிசார் சுற்றி வளைத்தனர். இருப்பினும் அந்நபர் தப்பி சென்று விட்டார்.

6 அடி உயரமுள்ள கருப்பின இளைஞர் ஒருவரின் செயலாக இருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இதே மில்வாக்கி நகரில் உள்ள குருத்வாராவில் பக்தர்கள் மீது மர்ம நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தினார். திரையரங்கிலும் இதே போன்று தாக்குதல் நடத்தப்பட்டது.

இரவு நேரத்தில் நடந்த இந்த துப்பாக்கி சூடு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பொஸ்னியாவில் இரும்புப் பாலம் திருட்டு: மக்கள் அதிர்ச்சி




போஸ்னியா நாட்டில் இரும்பு பாலத்தை திருடி சென்றவனை பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஐரோப்பிய நாடான போஸ்னியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ளது பிராககோ. விளைநிலங்கள் சூழ்ந்த இப்பகுதியில் ஆற்றை கடக்க இரும்பு பாலம் ஒன்று இருந்தது.

80ஆம் ஆண்டுகள் முன் கட்டப்பட்ட இந்த பாலம் கடந்த வாரம் காணாமல் போனது. இது தொடர்பாக அப்பகுதி மக்கள் பொலிசிடம் புகார் தெரிவித்தனர்.

வழக்கமாக கழிவுநீர் கால்வாயின் இரும்பு மூடிகளை திருடும் நபர் ஒருவர் மீது பொலிசுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

29 வயதுடைய அந்த திருடனின் வீட்டுக்கு வெளியே திருடப்பட்ட பாலம் இரண்டாக உடைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்ததை பொலிசார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து அந்த திருடனை பொலிசார் கைது செய்தனர். கழிவு நீர் கால்வாய் மூடிகளை திருடி வந்த திருடன் பெரிய தொகையை சம்பாதிக்கும் நோக்கில், இரும்பு பாலத்தையே பெயர்த்து எடுத்து சென்றதைக் கண்டு அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# கழிப்பறை இல்லாத வீட்டிற்கு மணமகளாகச் செல்லாதீங்க

## அமைச்சர் யோசனை




வீட்டில் கழிப்பறை கட்டாத, குடும்பத்திற்கு எந்தப் பெண்ணும் மணமகளாக செல்லக்கூடாது, என, மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர், ஜெய்ராம் ரமேஷ் யோசனை தெரிவித்துள்ளார். நம் நாட்டில், கழிப்பறை-களை விட, கோவில்களே அதிகம் என, அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், சமீபத்தில் தெரிவித்தது, பெரிய அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ராஜஸ்தான் மாநிலம், கோடா மாவட்ட கிராமம் ஒன்றில், பெண்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் மத்தியில், நேற்று பேசிய, ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது: வீட்டில் கழிப்பறை கட்டாத, குடும்பத்திற்கு எந்தப் பெண்ணும் மணமகளாக செல்லக் கூடாது. அந்த வீட்டைச் சேர்ந்த ஆண்களை திருமணம் செய்யக் கூடாது. ஒரு இளம் பெண்ணுக்கு திருமணம் செய்யும் முன், அவரின் ஜாதகமும், அவருக்கு மாப்பிள்ளையாக வரப்போகும், பையனின் ஜாதகமும் பொருந்துகிறதா என, பலர் ஜோதிடம் பார்க்கின்றனர்.

ஆனால், தன் மகள் திருமணம் செய்யப் போகும் பையன் வீட்டில், கழிப்பறை இருக்கிறதா என, யாரும் பார்ப்பதில்லை. இனி யாவது, தாங்கள் வாழப் போகும் வீட்டில், கழிப்பறை உள்ளதா என, இளம் பெண்கள் பார்க்க வேண்டும். கழிப்பறை இல்லையேல், பெண் இல்லை என்பதை, பெற்றோரும் உறுதிப்படுத்த வேண்டும். சுகாதாரம் என்பது, பெண்களின் கௌரவம் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடையது. இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

## பக்ரித் பண்டிகை:

# வெள்ளாடுகளுக்குச் சயிப் கரினா ஜோடியின் பெயர் சூட்டடல்



உலகம் முழுவதும் பக்ரித் பண்டிகை வரும் 27ஆம் திகதி கொண்டாடப்பட உள்ள நிலையில் டெல்லியில் ஒரு வெள்ளாடு ரூ. 4 இலட்சத்திற்கு விற்கப்படவுள்ளது.

பக்ரித் பண்டிகை அன்று முஸ்லிம்கள் அனைவரும் இறைவனுக்காக ஆடுகளை பலியிட்டு காணிக்கையாக செலுத்துவர்.

அந்த வகையில் புதுடெல்லி ஜும்மா மசூதி பஜாரில் ஆடுகளின் விற்பனை அமோக மாகியுள்ளது. அதிலும் சமீபத்தில் திருமணமான சயிப் அலிகான் கரினா கபூர் பெயரிடப்பட்ட ஒரு வெள்ளாட்டின் விலை ரூ. 4 இலட்சமாம். தற்போது 5 அடி உயரத்தில் காணப்படும் இந்த வெள்ளாட்டு ஜோடி தலா 200 கிலோ எடையுடன் உள்ளது. இந்த வெள்ளாடுகளுக்கு தினமும் ஒரு கிலோ ஜோவாரும், நான்கு கிலோ பசும் புல்லும், 3 லீற்றர் பாலும் உணவாக அளிககப்படுகிறது. இதுபற்றி ஆட்டின் உரிமையாளர் இத்ரிஸ் கூறியதாவது: இந்த ஜோடியை தனித்தனியாக வாங்க விரும்பினால் ஒரு ஆட்டின் விலையாக ரூ.2.5 இலட்சம் தரவேண்டும். ஜோடியாக வாங்குபவர்களுக்கு ஒரு இலட்சம் தள்ளுபடி செய்து விற்பனை செய்ய தயாராக இருப்பதாக கூறினார்.

# ஆதீன வளர்ச்சிக்கு ஒரு பைசா கூட நித்தியானந்தா தரவில்லை

## மூத்த ஆதீனம்



மதுரை ஆதீன வளர்ச்சிக்கு ஒரு பைசா கூட சுவாமி நித்தியானந்தா தரவில்லை என மூத்த ஆதீனம் அருணாகிரி சுவாமி கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரலில் மதுரை ஆதீன மடத்திற்கு இளைய சந்நிதான-மாக நியமிக்கப்ட்ட சுவாமி நித்தியானந்தா நேற்று முன்தினம் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அவர் இளைய சந்நிதானமாக நியமிக்கப்பட்ட போது மடத்தின் வளர்ச்சிக்காக ரூ.100 கோடி கொடுக்கப்போவதாக அறிவித்தார்.

இதில் முதற்கட்டமாக ரூ.5 கோடி தருவதாக கூறினார். இது தொடர்பாக நேற்று மூத்த ஆதீனம் அருணாகிரி சுவாமி, நித்தியானந்தா சொல்வதெல்லாம் பொய்.

ஒரு பைசா கூட இதுவரைக்கும் அவர் தரவில்லை என்றார். ஆதீனத்தை சிவபெருமான் காப்பாற்றி விட்டார். என் மனக் கவலை தீர்ந்தது. நிம்மதியாக சிவபூஜை செய்தேன். அடுத்து நடப்பதை சிவ பெருமான் பார்த்துக் கொள்வார் என்றார்.

கடந்த மாதங்களில் நடந்த பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில், நித்தியானந்தாவிற்கும் எனக்கும் எந்தவிதமான மனக்கசப்பும் இல்லை, ஒற்றுமையாகவே இருக்கிறோம் என கூறி வந்த அருணாகிரி சுவாமி தற்போது நித்தியானந்தாவைப்பற்றி குறை கூறுவது குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸில் இணைகிறார் நடிகை நமீதா



தென்னிந்திய திரைப்பட நடிகை நமீதா காங்கிரஸில் இணையப் போவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா முழுவதும் பெரும்பாலான மாநிலங்களில் காங்கிரஸ் செய்த ஊழல்கள் அம்பலமாகி வருகின்றன.


இந்நிலையில் ஆட்சியை தக்க வைக்க காங்கிரஸ் பல்வேறு வியூகங்களை கையாள முயற்சி செய்து வருகின்றது.

சினிமா நடிகைகளை வைத்து கட்சிக்கு பலம் சேர்க்கும் ஒரு ஐடியாவையும் காங்கிரஸ் வைத்துள்ளதாம். இதனடிப்படையில் தென்னிந்திய திரைப்பட நடிகை நமீதா காங்கிரஸில் இணைய உள்ளதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது. எந்தக் கட்சியில் சேர்வீர்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த நமீதா, கதராடை அணிவதுதான் தனக்கு பிடிக்குமென சூசகமாக கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் தலைவர்கள் அணியும் பிரதான ஆடை கதர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய செய்திகள்

## ஒரே நாளில் 50 பல்லிகளை சாப்பிட்டு சாதனை நிகழ்த்த விரும்பும் விவசாயி



ஒரே நாளில் 50 பல்லிகளை சாப்பிட்டுச் சாதனை நிகழ்த்த விரும்புவதாக விவசாயி ஒருவர் தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி அருகே அனுமந்தராயன் கோட்டையைச் சேர்ந்த விவசாயி அமல்ராஜ், டிஸ்கவரி சானல் பார்ப்பதில் அதிக ஆர்வம் உடையவர்.

அதில் பாம்பு, கரப்பான்பூச்சி போன்றவைகளை நிகழ்ச்சியா-ளர்கள் சாப்பிடுவதை அடிக்கடி பார்த்துள்ளார்.

எனவே தாமும் இவர்களைப் போல செய்ய வேண்டுமென விரும்பிய இவர், கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு தோட்டத்தில் வேலை செய்தபோது கண்ணில் தென்பட்ட பல்லியைப் பிடித்து உயிருடன் சாப்பிட்டுள்ளார். ஆனால், உடலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இதையடுத்து வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களில் 4 அல்லது 5 பல்லிகளை பிடித்துச் சாப்பிட்டார்.

இதுவரை 64 பல்லிகளை சாப்பிட்டுள்ள அமல் ராஜ், பொது மக்கள் முன்னிலையில் 3 பல்லிகளை ஒவ்வொன்றாக வாயில் போட்டுக் கடித்துச் சாப்பிட்டு முடித்தார். இதைப் பார்த்தவர்கள் ஆச்சர்யமடைந்தனர்.இது குறித்து அமல்ராஜ், எனக்கு பல்லிகளை சாப்பிட்ட விருப்பமாக உள்ளதனால் சாப்பிட்டு வருகிறேன். இதனால் எனது உடலுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. நான் ஆட்டு கறி, கோழிக்கறி போன்றவைகளை சமைத்துச் சாப்பிடுகிறேன்.ஆனால், பல்லியை சமைக்காமல் உயிருடன் அப்படியே சாப்பிட்டு வருகிறேன். ஒரே நாளில் 50 பல்லிகளை சாப்பிட்டு சாதனை நிகழ்த்த எனக்கு விருப்பமாகவுள்ளது என்றார்.



மிஸ் ஐதராபாத் போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர்கள் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பந்தயத்தில் கலந்துகொண்டனர்.

## துர்க்கா பூஜையைக் குடும்பத்துடன் கொண்டாட சொந்த ஊருக்கு புறப்பட்டார் ஜனாதிபதி பிரணாப்

நாட்டில் பல்வேறு பிரச்சினை-களை வைத்துக்கொண்டு துர்கா பூஜையை குடும்பத்துடன் கொண்டாடச் சொந்த ஊருக்கு புறப்பட்டார் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி.

நாட்டின் ஜனாதிபதி என்ற அந்தஸ்துடன் முதல்முறையாக துர்கா பூஜையில் கலந்துகொள்ள தனது மாநிலத்துக்கு வருகிறார்.

எனவே பிரணாப்பின் இந்த வருகை, மம்தாவின் அரசுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியிருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

மாநில அரசின் நாள்காட்டியில், துர்கா பூஜை விழா விடுமுறைகள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மிக முக்கியமான விழா நாளாகத் திகழ்கிற நிலையில், பிரணாப் முகர்ஜியின் பாதுகாப்புக்காக மட்டும் ரூ.5 கோடியை மாநில அரசு செலவிடுகிறது.

அதுவும், பிரணாப் முகர்ஜி, 4 நாட்களே இங்கே தங்கவுள்ளாராம். நேற்று பிரணாப் முகர்ஜி கோல்கத்தாவின் டம்டம் விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அதுவும் தேசிய பாதுகாப்புப் படையினர் 60 பேர், மருத்துவர்கள், அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் என ஒரு பெரிய குழுவுடன் இறங்கியிருக்கிறார்.

இதில் பிரணாப் முகர்ஜிக்கு பாதுகாப்புகள் கொடுப்பதே மம்தா அரசிற்கு பெரிய தலைவலியாகும்.

ஏனெனில் பிரணாப் முகர்ஜியின் சொந்த கிராமம் அமைந்துள்ள பிர்பும் பகுதி, மாவோயிஸ்டுகளின் செல்வாக்கில் உள்ள மலை வாழ் மக்கள் பகுதி.

ஜனாதிபதியின் பாதுகாப்பு வளையம் மட்டுமல்லாது, மாநில அரசின் 1500 பொலிஸாரும் இந்தப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

# டெல்லி டெயாடெவில்ஸ் அணியை வெற்றி கொண்டது பேர்த் அணி

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரின் இன்றைய முதலாவது போட்டியில் டெல்லி டெயாடெவில்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் டெல்லி டெயாடெவில்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் இறுதிநேரத்தில் வெற்றிபெற்றது.

நியூலன்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி டெயாடெவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை விரைவாக இழந்த அவ்வணி, அதன் பின்னர் இரண்டாவது விக்கெட்டுக்காக 73 ஓட்டங்களைப் பெற்றது.

ஆனால் தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடாததோடு, வேகமாக ஓட்டங்களைக் குவிக்கவும் தவறியிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக ஷோன் மாரஷ் 41 பந்துகளில் 39 ஓட்டங்களையும், சைமன் கற்றிச் 33 பந்துகளில் 34 ஓட்டங்களையும், மிற்சல் மார்ஷ் 18 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டெல்லி டெயாடெவில்ஸ் அணி சார்பாக மோர்னி மோர்க்கல் 4 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெடடுக்களையும், அஜித் அகர்கர் 4 ஓவர்களில் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

122 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி டெயாடெவில்ஸ் அணி 19.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்த டெல்லி டெயாடெவில்ஸ் அணி சார்பாக விரேந்தர் செவாக் மாத்திரம் தனித்துப் போராடினார்.

# அஜந்த மெண்டிஸின் உடற்தகுதி தொடர்பில் சந்தேகம்




இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸின் உடற்தகுதி தொடர்பான சந்தேகம் இன்னமும் நிலவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்திற்கெதிரான டுவெண்டி டுவெண்டி, ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையிலேயே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை சார்பாக உலக டுவெண்டி டுவெண்டி தொடரில் பங்குபற்றிய அஜந்த மெண்டிஸ், முதலாவது போட்டியிலேயே உலக சாதனை படைத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய போதிலும், அப்போட்டியிலேயே காயமடைந்திருந்தார்.

இரண்டாவது போட்டியில் பங்குபற்றியிருக்காத அவர், அதன் பின்னர் அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார்.

இந்நிலையில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க, உலக டுவெண்டி டுவெண்டி தொடரில் ஏற்பட்ட உபாதையிலிருந்து அஜந்த மெண்டிஸ் இன்னமும் குணமடைந்து வருவதாகத் தெரிவித்தார்.


நியூசிலாந்துத் தொடரைப் பொறுத்தவரை அஜந்த மெண்டிஸின் உடற்தகுததி மாத்திரமே தற்போதைய நிலையில் சந்தேகமாக உள் ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முதலாவது போட்டியில் காயமடைந்த பின்னர் மூன்றாவது போட்டியிலிருந்து அஜந்த மெ[illegible]டிஸ் பங்குபற்றிய போதிலு[illegible] நோ நிவாரணிகளின் துணையோடே அஜந்த மெண்டிஸ் போட்டிகளில் பங்குபற்றியதாகவும், அவர் இன்னமும் குணமடையவில்லை எனவும், அவருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துத் தொடரில் பங்குபற்றவுள்ள அணிகள் அடுத்த வாரமளவில் தெரிவுசெய்யப்படும் எனத் தெரிகிறது.

நியூசிலாந்துத் தொடர் எதிர வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

# கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இலகு வெற்றியைப் பெற்றது



இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரின் நேற்றைய இரண்டாவது போட்டியில் கொல்கத்தா நைட் ரைட்ர்ஸ் அணி இலகுவான வெற்றி யைப் பெற்றது. ரைற்றன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 99 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நியூலன்ட்ஸில் இடம்பெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரைற்றன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய அவ்வணி, 2.5 ஓவர்களில் 32 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் போது முதலாவது விக்கெட்டை இழந்த போதிலும் தொடர்ந்து வந்த வீரர்கள் அதிரடியாக ஆட சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக கௌதம் கம்பீர் 36 பந்துகளில் 44 ஓட்டங்களையும், தேப்ரட்டா தாஸ் 19 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், பிரென்டன் மக்கலம் 20 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரைற்றன்ஸ் அணி சார்பாக றூலோஃப் வன்டர்மேவா 4 ஓவர்ளில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், எதி எம்பலாட்டி, கோர்ன்லியஸ் டீ வில்லியர்ஸ், டேவிட் வியஸி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

189 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ரைற்றன்ஸ் அணி 16.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர்.

அவ்வணி ஒரு கட்டத்தில் 7.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 51 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதும், அடுத்த 4 விக்கெட்டுக்களும் 9 ஓட்ட இடைவெளியில் வீழ்த்தப்பட்டிருந்தன. அவ்வணியின் முதல் 3 வீரர்களைத் தவிர அனைத்து வீரர்களும் ஒற்றைப் படை ஓட்டங்களையே பெற்றனர்.

போட்டியின் நாயகனாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக தேப்ரட்டா தாஸ் தெரிவானார்.

# நுவரெலியா மேயர் கிண்ணத்தை யங்பேட்ஸ் விளையாட்டுக் கழகம் வென்றது



நுவரெலியா மேயர் கிண்ணத்தை ஆறாவது தடவையாகவும் யங் பேட்ஸ் விளையாட்டு கழகம் கைப்பற்றியது. மேயர் கிண்ணத்துக்கான உதைப் பந்தாட்ட இறுதிப்போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நுவரெலியா மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில் நுவரெலியா யங்பேட்ஸ் விளையாட்டு கழகமும் நுவரெலியா ரேன்ஞர்ஸ் விளையாட்டு கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் நுவரெலியா யங்பேட்ஸ் விளையாட்டு கழகம் 1 - 0 என்ற கோல் கணக்கில் ரேன்ஞர்ஸ் விளையாட்டுக் கழகத்தை ஆறாவது முறையாக வெற்றி கொண்டது.

இறுதிப் போட்டியின் பிரதம அதிதியாக நுவரெலியா மேயர் மஹிந்த குமார தொடம்பே கமகே கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் கேடயத்தையும் வழங்கிவைத்தார்.

இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக யங்பேட்ஸ் விளையாட்டு கழக வீரரான ரங்கன உயன்வத்தவும் சிறந்த கோல் காப்பாளராக ரேன்ஞர்ஸ் விளையாட்டு கழகம் வீரரான கலைக்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பாகிஸ்தான் பதினொருவர் அணிக்கு மீண்டும் வெற்றி



பாகிஸ்தானில் இடம்பெற்று வந்த சர்வதேச உலகப் பதினொருவர் அணிக்கும், பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணிக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான போட்டியிலும் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி வெற்றிபெற்றுள்ளது. இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கராச்சி தேசிய மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சர்வதேச உலகப் பதினொருவர் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக் களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. தொடக்கம் முதலே விக்கெட்டுக்களை இழந்த அவ்வணியால் எந்தவொரு கட்டத்திலும் ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை. ஒரு கட்டத்தில் 15.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவ் வணி இறுதி வீரர் நன்ரி ஹேய் வேர்ட்டின் அதிரடியால் 142 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சர்வதேச உலகப் பதினொருவர் அணி நன்ரி ஹேய்வேர்ட் 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், அன்ட்ரே சேய்மோர் 31 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றதோடு, உதிரிகளாக 26 ஓட்டங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி சார்பாக பராஸ் அஹமட் 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், தபிஸ் கான் 3 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சொஹைல் கான், சொய்ப் மலிக், உமர் அக்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 23.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது